Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 17 சனிக்கிழமை (30.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 163

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## இந்திய உயர்ஸ்தானிகருடன் ஜனாதிபதி கோட்டா சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

இலங்கையின் இராஜதந்திர உறவுகளில் வரலாற்று முக்கியத்துவம் 15

சஜித் தரப்பிலுள்ள 99 உறுப்பினர்களை

## ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து இடைநிறுத்துவதற்கு தீர்மானம்

ரணில் தலைமையிலான செயற்குழுவில் முடிவு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்திக் கட்சியின் ஊடாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்களை தாக்கல் செய்த 99 பேரை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நீக்க அந்த கட்சியின் 15

முள்ளிவாய்க்கால் யுத்தத்தில்

# பிரபாகரன் நேரடி சமர் செய்திருந்தார்

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் மனந்திறந்தார் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா


(கொழும்பு)

**முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பிரபாகரனே நேரடியாகக் களம் புகுந்து சமர் செய்திருந்தார் என பாதுகாப்பு படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

சிங்கள சமூக வலைத்தள ஊடகமொன்றுக்கு வழங்கியிருக்கும் நேர்காணலிலேயே இராணுவத் தளபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

**கேள்வி :** யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் எவ்வாறான மனநிலை காணப்பட்டது?

**பதில் :** மே 18ஆம் திகதி யுத்தம் நிறைவடைந்தது. 19ஆம் திகதி பிரபாகரனுடைய சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்பிருந்தே விறு விறுப்பான நிலைமையே காணப்பட்டது. ஒரு விநாடி கூட நித்திரை கொள்வதற்கு நேரம் கிடைக்கவில்லை. 17ஆம் திகதி இரவு நிச்சயமாக யுத்தத்தை வெற்றி கொள்ள முடியும் என்று உறுதியான நம்பிக்கை இருந்தது. 15



## தொண்டமானின் இறுதிக் கிரியைகள்
நாளை ஞாயிற்றுக்கிழமை

(கொழும்பு)

காலமான அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு ஹட்டன் நோர்வூட் சௌமியமூர்த்தி தொண்டமான் விளையாட்டரங்கில் முழு அரச மரியாதையுடன் நடைபெறவுள்ளது.

மேலும் நுவரெலியா மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்று 27ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் மே 31ஆம் திகதி 15

## கொரோனா 1558 ஆக உயர்வு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 28 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்மூலம், கொரோனா வைரஸ் தொற்றியவர்களின் எண்ணிக்கை 1,558 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றைய தினம் கொரோனா தொற்றுக் 15

## இரு வேறு சம்பவங்களில் வவுனியாவில் மோதல்

இரு பெண்கள் உட்பட மூவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியாவில் நேற்று மாலை இடம்பெற்ற இருவேறு மோதல் சம்பவங்களில் இரண்டு பெண்கள் உட்பட மூன்று பேர் படுகாயமடைந்த நிலை 15

## குரும்பசிட்டியில் குண்டுகள் மீட்பு



(அராலி)

தெல்லிப்பழை 15

யாழ்.போதனாவில் குருதித் தட்டுப்பாடு

## இரத்ததானம் வழங்குமாறு குருதிக் கொடையாளர்களுக்கு

போதனா பணிப்பாளர் சத்தியமூர்த்தி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கியில் கடந்த சில 15

## யாழில் நேற்று 39 பேருக்கு கொரோனா பரிசோதனை

முல்லை தனிமைப்படுத்தலிருந்த ஒருவருக்கு தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை 39 பேருக்கான 15

## மட்டுவில் பன்றித்தலைச்சி ஆலய சிவாச்சாரியார் வீட்டில்

ஊரடங்கு அமுலில் இருந்தவேளை துணிகரத் திருட்டு

(மீசாலை)

மட்டுவில் சரசாலைப் பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியள 15

## முகநூல் காதலியை பார்க்கச் சென்ற
இளைஞன் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

முகநூல் காதலியைப் பார்க்கச் சென்ற இளைஞரை வழிமறித்து தாக்குதல் நடத்திய கும்பல் ஒன்று அவரிடம் இருந்து கைத்தொலைபேசி மற்றும் ஒரு தொகை 15

# இயற்கைப் பசளை (ORGANIC) வீட்டுத் தோட்டம்

எமது ஸ்தாபனத்தின் மூலமாக வட மாகாணம் முழுவதும் இரசாயனக் கலப்பற்ற இயற்கைப் பசளைகள் மூலமாக வீட்டுத் தோட்டம் ஒவ்வொரு வீட்டிலும் அனைவராலும் பங்குபற்றி பயன் பெறக்கூடிய வகையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.



**இவ் உற்பத்தியில் பங்குபற்றுவதன் மூலம் குறைந்த செலவில் நிறைவான பயனைப் பெற முடியும். மாதாந்தம் 20,000 ரூபாவிலிருந்து உங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும்.**

**எமது ஸ்தாபனத்தினால் பின்வரும் பொருட்களை குறைந்த விலையில் வழங்கி உங்கள் அனைவரையும் இத்திட்டத்தில் ஈடுபட ஊக்குவிக்குகின்றோம்.**

எமது ஸ்தாபனத்தினால் வழங்கப்படும் மூலப்பொருட்கள் பின்வருமாறு:-

1. இரண்டு விதமான அதி உச்ச பயனைக் கொடுக்கும் இயற்கை உர வகைகள்
2. மரக்கறி நாற்றுக்கள், செடிகள் (தக்காளி, கத்தரி, கறிமிளகாய், வெண்டி, பாவற்காய், பச்சை மிளகாய், பூசணிக்காய்)
3. பயிரை வளர்ப்பதற்கான இரசாயனக் கலப்பற்ற பைக்கற்றுகள்

மேலே குறிப்பிட்ட சகல விதமான மூலப் பொருட்களையும் கொள்வனவு செய்வதற்கு நாம் அறவிடும் கட்டணம்

ஒரு பைக்கற்றுக்கு **100/=** மட்டுமே

மேற்குறிப்பிட்ட இத்திட்டத்தில் பங்குபற்றி இரசாயனக் கலப்பற்ற உணவினை உண்டு நீண்ட காலம் சுகதேகிகளாக வாழுங்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு:-

## வறுமை ஒழிப்பு சமூக நல அமைப்பு

தொ.பே:- 076 167 6824, 076 769 9191

(எமது நிறுவனம் கனடாவிலும் இலங்கையிலும் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்)

(C-9645)


# IT Job Opportunity at North American Software Company in Jaffna

**Invexium**

A North American Software company is planning to set up operations in Jaffna, Sri Lanka and looking for candidates who can speak very good English and know development in Microsoft development stack are encouraged to send their CV with expected salary to

HRJaffna@invexium.com

We are looking for energetic candidates who can work independently and ready to work for a Startup

The following positions are available

1) Full-stack developer in .NET MVC & Angular
2) T-SQL developer
3) Remote Implementation Consultant

## 1) Full Stack developer

Looking for a full stack developer who knows Angular, .net c# & T-SQL and has several years of work experience in developing ERP Software. You will be responsible for designing, planning, and implementing software development,

### REQUIRED SKILLS & EXPERIENCE :

- Minimum of 5-7 years of applications development experience in the areas of:
- C# / ASP.NET Core design patterns and core principles
- Web UI Development (JavaScript / HTML5 / CSS / Bootstrap)
- Web component framework experience with Angular or AngularJS
- Web Service / API application integration experience (REST APIs)
- Experience with MS SQL Server

## 2) T-SQL Developer

The role of the Senior SQL Developer is to provide senior-level support for the technical team as well as work on complex projects. The individual is expected support the management of their consulting practices. The Senior SQL Developer must have prior working experience in the industry. You will be part of the Implementation and Support Team, helping with the technical aspect of ERP software.

### Responsibilities and Duties

- Help with Implementing ERP Software
- writing complex custom reports in SSRS, Tableau & Power Bi
- writing complex stored procedures, user functions
- Responsible for developing stored procedures for custom applications based on business requirements
- 3-5 years experience with SQL Server.

## 3) Remote Implementation Consultant

The role of the Implementation Consultant is to be a primary point of contact for a portfolio of clients, managing the full software implementation life cycle including installation, business process analysis/workflow design, configuration, training, user testing, and overall project management. The individual is expected to work alongside other team members to proactively support the management of their consulting practices. The Implementation Consultant must be detail-oriented, anticipatory, organized and able to work independently in a fast-paced environment while managing confidential information. They should also have a good command of Accounting and Real Estate and Investment Management and accounting knowledge would be an asset.

### Education :

- Chartered Accountant (Qualified/Semi Qualified) / MBA-Finance.

### Qualifications:

- 3+ years' experience with enterprise class software implementation delivery in a project management or business analyst role.
- Strong domain knowledge in Finance especially Financial Accounting with ability to understand and interact on complex accounting requirements.
- Good knowledge of international accounting practices and standards.
- Willing to work on ERP Software implementation and/or support projects.
- Excellent verbal and written communication and strong presentation skills.
- Experience designing and drafting project management deliverables.
- Proven background in technology consulting and medium to large scale technical roll outs.
- Knowledge of accounting and business process in real estate and investment management.
- Completed training delivery as part of consulting track.
- Excellent analytical and problem-solving skills.

(2910)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




## அமரர் செல்லையா காஞ்சிமாவடிவேல்

**(காஞ்சியப்பா)**

திதி : 31.05.2020

கனவெல்லாம் நனவாக்க நின்றவரே
எம்மை தவிக்கவிட்டு சென்றதேனோ
விழுதுகளாய் வீழ்ந்து போனோமப்பா
அப்பா என்று சொல்ல எங்களுக்கு யாருமில்லை
நாங்கள் சாய்ந்து கொள்ள உங்கள் தோள்களில்லையப்பா
உயிருள்ள நடைப்பிணங்களாய் உலாவருகிறோமப்பா
இது கனவாக இருக்கக் கூடாதா?
என நினைத்து முடிக்கையில் ஓராண்டுகள் ஓடிவிட்டதப்பா
எம் உயிர் மூச்சு உள்ளவரை ஒவ்வொரு நொடியும்
உங்கள் நினைவுகள் இருக்குமப்பா!

31.05.2020 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பூஜையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

(C-9638)

மயிலியதனை, தொண்டைமானாறு. உங்கள் பிரிவால் துயருறும் - குடும்பத்தினர்

# தனி நாட்டுச் சிந்தனையில் இருந்து விடுபட்டு இனி நாட்டு மக்களுக்குச் சேவை செய்வோம்

## தமிழ் அரசியல்வாதிகள் மனம் மாற வேண்டும் என்கிறார் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

**வடக்கு, கிழக்குப் பகுதிகளை தனி நாடாக்க வேண்டும் என்ற சிந்தனையின் மூலம் இந்த நாட்டில் தமிழ் அரசியல் நீண்டகாலமாக ஆதிக்கம் செலுத்தி வருகின்ற நிலையில் இது நடைமுறைக்கு சாத்தியமான கோரிக்கையல்ல என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.**



இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக 50 ஆண்டுகளை நிறைவு செய்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவின் தொலைக் காட்சி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

"தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டதாக நினைக்கிறீர்களா?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போது, முன்னதாக இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு இருக்கும் பிரச்சினையும் தமிழ் அரசியல்வாதிகளின் பிரச்சினையும் வேறு வேறு என்பதைத் தெரிவிக்க வேண்டியது முக்கியமானது.

மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதும் அவர்களுக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதும் முன்பு அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்த வாய்ப்புகளை பல திட்டங்கள் மற்றும் வளர்ச்சியின் மூலம் ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதும் எனது விருப்பமாக இருந்தது.

எப்படியிருந்தாலும் அரசியல் வாதிகளுடன் இணைந்த அந்தச் சாலை மிகவும் நீண்டதாகவும் கடினமானதாகவும் இருந்தது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளை தனி நாடாக்க வேண்டும் என்ற சிந்தனையின் மூலம் இந்த நாட்டில் தமிழ் அரசியல் நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்துகின்றது.

இது நடை முறை சாத்தியக் கோரிக்கையல்ல. வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளைத் தாண்டி ஏராளமான தமிழர்கள் வசித்து வருகின்றார்கள். தெற்கில் தமிழர்கள் சிறுபான்மையினர்.

கொழும்பு நகரில் தமிழ் மற்றும் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையினர்.

இலங்கை யில் மக்கள் கலந்து அழகாக வாழ்கின்றனர். தனிநாடு என்பது சாத்தியமானது அல்ல. தமிழ் அரசியல்வாதிகள் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்றாற்போல சரி செய்துகொள்ள வேண்டும்" என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை புறந்தள்ள இலங்கை ஒன்றும் மனச்சாட்சியற்ற நாடல்ல

## தயாசிறி தெரிவிப்பு



(கொழும்பு)

அந்நியச் செலாவணி மூலம் நாட்டுக்கு பெரும் பலத்தை வழங்குகின்ற வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற இலங்கையர்களை புறந்தள்ளுமளவிற்கு இலங்கை மனச்சாட்சியற்ற நாடல்ல என்றும் வெளிநாடுகளிலிருந்து அழைத்துவரப்படும் இலங்கையர்களை முறையாக பரிசோதனைக்குட்படுத்தி அவர்களை குணப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டியேற்படும் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அந்நியச் செலாவணி மூலம் நாட்டுக்கு பெரும் பலத்தை வழங்கியவர்களே தற்போது வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கின்றனர். பங்களாதேஷ், குவைத், மாலைதீவு மற்றும் ஏனைய அரபு நாடுகள் என பல்வேறு நாடுகளிலும் சிக்கியுள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு பெரும் சேவையாற்றியவர்களாவர்.

இவர்களை நோயாளர்கள் எனக் கூறி அவர்களை புறந்தள்ளுமளவிற்கு இலங்கை மனச்சாட்சியின்றி செயற்படும் நாடல்ல.

தற்போது 2 ஆயிரம் பேர் வரையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தக்கூடிய வசதிகளே காணப்படுகின்றன.

அதற்கமையவே வேலைத் திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

எனவே வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு முன்னரே பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கக் கூடியதாக இருந்தால் அது மிகவும் சிறந்த வழிமுறையாகும். ஆனால் தற்போது அது பிரச்சினையல்ல.

குவைத் போன்ற நாடுகளில் பெருமளவானோர் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருகின்றனர். ஆனால் அவர்களுக்கு எவ்வித வசதிகளும் இல்லை. அதுவே தற்போது காணப்படும் பெரும் பிரச்சினையாகும்.

இவை மாத்திரமின்றி விசா இன்றியும் பலர் உள்ளனர். இந்நிலையில் இவர்களை புறக்கணித்து அவர்களை மரணிக்கச் செய்வதா? அல்லது அவர்களை நாட்டுக்கு அழைத்து வந்து குணமடையச் செய்வதா? என்பது பற்றியே நாம் சிந்திக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ஊரடங்கை மீறிய 143 பேர் கைது

(கொழும்பு)

ஊரடங்கு சட்டத்தை மீறிய 143 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது 45 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட காலத்திலிருந்து இதுவரையான காலப்பகுதியில் 66 ஆயிரத்து 608 பேர் கைது செய்யப்பட்டதுடன் 18 ஆயிரத்து 770 வாகனங்களும் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# அரிசிக்கான புதிய விலை வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

அரிசிக்கான புதிய கட்டுப்பாட்டு விலை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித்தல் நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்கவின் உத்தரவின் பேரில் நேற்று வெளியிடப்பட்டது.

குறித்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட விலைகள் நேற்று முதல் அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வெள்ளை மற்றும் சிவப்பரிசி ஒரு கிலோ 93 ரூபாய் எனவும் வெள்ளை மற்றும் சிவப்பு நாட்டரிசியின் விலை 96 ரூபாய் எனவும் வெள்ளை மற்றும் சிவப்பு சம்பா ஒரு கிலோ 98 ரூபாய் எனவும் கீரிச்சம்பா ஒரு கிலோ 125 ரூபாய் எனவும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த விலைகளை விட அதிக விலையில் விற்பனை செய்தல், அதிக விலையிலான விலைப்பட்டியலை காட்சிப்படுத்தல் என எந்தவொரு உற்பத்தியாளராலும் விநியோகஸ்தராலும் அல்லது வர்த்தகராலும் மேற்கொள்ளப்படக் கூடாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-8)


## ஏலவிற்பனை

**ஜி.எச்.ஏ.டி.சில்வா அன் கோ** பிரதான வீதி, முல்லைத்தீவு நிறுவனத்தில் 01.01.2018 தொடக்கம் 31.03.2018 வரையான காலப்பகுதியில் வைக்கப்பட்ட அடகு நகைகள் யாவற்றையும் 18.07.2020 இற்கு முன்பாக மீட்கவும். மீட்க முடியாது விட்டால் ஒரு பகுதி பணத்தைச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத்தவறின் 19.07.2020 இல் ஏலத்தில் விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றேன்.

**தொ.பேசி :- 0776652895**

(2905)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தாரியுடன் தொடர்பில் இருந்தவர் தன்னைப் புலனாய்வு அதிகாரி என அடையாளப்படுத்தினார்

## தனியார் பாதுகாப்பு அதிகாரி ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தில் தற்கொலைத் தாக்குதல் நடத்திய அப்துல் லத்தீப் ஜமீல் என்பவருடன் தொடர்பில் இருந்த ஒருவர் தன்னைப் புலனாய்வு அதிகாரியென்று அடையாளப்படுத்தினார் என தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்றின் அதிகாரியொருவர் நேற்று முன்தினம் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கினார்.

அவர் மேலும் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தாக்குதல் நடத்த முயன்ற ஜமீல், குண்டு வெடிக்காததையடுத்து மீண்டும் ஆட்டோ ஒன்றில் தெஹிவளைக்குச் சென்று ட்ரொப்பிக்கல் இன் விடுதியில் குண்டை வெடிக்க வைத்து இறந்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தினத்திலன்று மேலதிகாரியின் பணிப்புக்கு அமைய தெஹிவளையிலுள்ள மசூதி ஒன்றிற்கு பாதுகாப்புக் கடமைக்குச் சென்று கொண்டிருந்தேன். இதன்போது ஒரு நபரைச் சிலர் பிடித்து விசாரணை செய்து கொண்டிருந்தனர்.

நானும் அவ்விடத்திற்கு சென்று அந்த நபரின் அடையாள அட்டையைக் கேட்டேன். அவர் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்கினார். அதில் கண்டியை சேர்ந்த அப்துல் லத்தீப் ஜமீல் என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது மனைவிக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி அவரது அடையாளத்தை உறுதிப்படுத்த கேட்டேன். தன்னிடம் தொலைபேசி இல்லையென்றார். இதையடுத்து எனது தொலைபேசியைக் கொடுத்து, மனைவிக்கு அழைப்பேற்படுத்தும்படி கூறினேன்.

அவர் ஷிபானா என குறிப்பிடும் ஒரு பெண்ணிற்கு அழைப்பை ஏற்படுத்தி, தன்னை சிலர் சந்தேகத்தில் விசாரிப்பதாகவும் அவர்களிடம் தன்னைப்பற்றி அறிமுகப்படுத்தும்படியும் கூறினார்.

மறுமுனையில் பேசிய பெண், ஜமீல் தனது கணவன் என்றும் வெளிநாட்டிலிருந்து வந்திருப்பவர் என்றும் சிறிய தகராறொன்றையடுத்து வீட்டை விட்டு வெளியேறி விட்டார் என்றும் தெரிவித்தார். அதையடுத்து அந்த நபர் அங்கிருந்து செல்ல அங்கிருந்தவர்கள் அனுமதித்தனர்.

5 அல்லது 6 நிமிடத்தில் ஷிபானாவின் தொலைபேசியிலிருந்து மீள அழைப்பு வந்தது. ஆண் குரலில் தமிழில் பேசிய ஒருவர், ஜமீலை நிறுத்தும்படி கூறினார். எனினும் அதற்குள் ஜமீல் வெள்ளவத்தை பக்கமாக போய் விட்டார். இதனால் அவரை நிறுத்த முடியவில்லை.

மீண்டும் 2 நிமிடத்தில் அந்த நபர் அழைத்து ஜமீலைப்பற்றி விசாரித்தார்.

பின்னர் மாலையில் அந்த நபர் வேறொரு தொலைபேசியில் தன்னை அழைத்து ஜமீலை சந்தித்த இடத்தை அடையாளம் காட்டும்படி கேட்டதாகவும் ஹவ்லொக் டவுனிலுள்ள புத்தர் சிலைக்கு அருகில் வருமாறு அழைக்கப்பட்டதாகவும் கூறினார்.

பின்னர் அந்த நபருடன் குறிப்பிட்ட இடத்திற்கு சென்ற பின்னர், அங்கிருந்து வெளியேறிய போது புலனாய்வுத்துறை அதிகாரியென அடையாளப்படுத்திய நபருக்கு ஜமீல் அடையாளம் காட்டிய சாரதி அனுமதிப்பத்திரத்தின் புகைப்படம் குறுஞ்செய்தியாக வந்ததாகவும் தனக்கு காண்பித்ததும் அதுவும் ஒன்றா? என சரி பார்த்ததாகவும் குறிப்பிட்டார். பின்னர், "வேலை முடிந்தது" என குறிப்பிட்டு அந்த நபர் அங்கிருந்து வெளியேறியதாகவும் சாட்சியமளித்துள்ளார். (ஜ-4)

# உலகை அச்சுறுத்தும் கொரோனா 6 மில்லியனை நெருங்கும் பாதிப்பு



(ஜெனிவா)

மனித அழிவுகளை ஏற்படுத்திவரும் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 மில்லியனை நெருங்குகின்றது.

இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்கு 59 இலட்சத்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றால் 3 இலட்சத்து 62 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதுதவிர, 25 இலட்சத்து 79 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## இறுதி நிகழ்வில் கலந்துகொள்ள முடியாத அவலம்

(கொழும்பு)

மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள அவரது சிரேஷ்ட புதல்வி கோதை நாச்சியார் மத்திய கிழக்கு நாடான மஸ்கட்டில் இருந்து நாட்டிற்கு வர கடந்த இரண்டு நாட்களாக முயன்று வந்தார்.

இந்த நிலையில் அவர் அரச உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர நடவடிக்கைகளால் இறுதியாக இந்தியா ஊடாக அவர் நேற்று அதிகாலை கொழும்பு வந்தடைந்தார்.

அவர் கொழும்பு வந்தாலும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏனென்றால் கொரோனா சுகாதாரக் கட்டுப்பாடு வழிமுறைகளின் கீழ் அவர் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளார். (ஜ-4)

# இந்தியாவை மிரட்டும் கொரோனா ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 829 பேர் பாதிப்பு

## 4 ஆயிரத்து 713 பேர் பலி

(டில்லி)

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 829 ஆகவும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 713 ஆகவும் உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் புதிதாக 6 ஆயிரத்து 566 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 829 ஆக உயர்ந்துள்ளது.

இதேபோல் நேற்று முன்தினம் 194 பேர் உயிரிழந்தனர். இதனால் கொரோனாவுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 713 ஆக அதிகரித்துள்ளது. (ஜ-4)

## இயல்பாகவே இயங்கும் வீதித்தடை மாணவனால் புதிய கண்டுபிடிப்பு

(மருதமுனை)

இராணுவத்தினரின் பாதுகாப்பு காவலரண்களில் தானாகவே வீதித் தடைகளை ஏற்படுத்தி வாகனங்களை நிறுத்தக் கூடிய புதிய தொழில்நுட்ப முறையிலான கண்டுபிடிப்பு ஒன்றை மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரி மாணவன் எம்.எம். சனோஜ் அகமட் கண்டு பிடித்து சாதனை புரிந்துள்ளார்.

கொரோனாத்தொற்றுநோயால் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த 3 மாதங்களுக்கு மேலாக பாடசாலைகள் இயங்கவில்லை.

இந்நிலையில் இம்மாணவன் வீட்டிலிருந்தவாறு பாதுகாப்புத் தரப்பினரின் சமிக்ஞைகள் மற்றும் வீதித்தடைகளை மீறி செயற்படும் வாகனங்கள், சாரதிகளை மனிதவலு மாற்று நேரங்களை மீதப்படுத்தி கட்டுப்படுத்தக் கூடிய இந்த புதிய தொழில்நுட்ப முறையை கண்டுபிடித்து அறிமுகப்படுத்தியுள்ளார்.

இளம் வயதிலேயே புதிய தொழில்நுட்ப ரீதியான கண்டுபிடிப்புக்களை மேற்கொள்வதில் ஆர்வம் கொண்ட இந்த மாணவன் கடந்த இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னர் "சமூக இடைவெளியை பேணக்கூடிய நவீன ஸ்மாட் மின்னியல் கழுத்துப்பட்டி சாதனம்" ஒன்றை கண்டுபிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மண் அகழ்வை தடுத்தவர்கள் மீது தாக்குதல்; பெண் உட்பட ஆறு பேர் படுகாயம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு- வாகனேரி பகுதியில் சட்டவிரோதமாக மண் ஏற்றுவதற்கு சென்றவர்களை தடுத்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பெண் ஒருவர் உட்பட ஆறு பேர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வாகனேரி குளம் பகுதியில் ஓட்டமாவடியை சேர்ந்தவர்களினால் தொடர்ச்சியாக சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மண் அகழ்வுகள் குறித்து அப்பகுதியைச் சேர்ந்த மக்களினால் பல்வேறு தடவைகள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அப்பகுதிகளில் தொடர்ச்சியாக மண் அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் நேற்று முன்தினம் மாலை அப்பகுதிக்கு மண் அகழ்வுக்கு சென்றவர்கள், அப்பகுதியை சேர்ந்தவர்களினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் மண் அகழ்வுக்குச் சென்றவர்களினால் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஓட்டமாவடியைச்சேர்ந்தவர்கள் மேலும் ஒரு உழவு இயந்திரத்தில் வந்து அப்பகுதி மக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல்கள் காரணமாக பெண் ஒருவர் உட்பட ஆறு பேர்படுகாயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ஜ-4)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 168 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய 168 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளி பேணாமை தொடர்பிலேயே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த விடயம் தொடர்பில் கடந்த 26 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் 780 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட போதிலும் முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளி பேணுதல் உள்ளிட்ட சுகாதார வழிமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றுமாறு பொதுமக்களை பொலிஸார் அறிவுறுத்தினர். (ஜ-8)

# ஜனநாயக நீரோட்டத்திலிருந்து விலகி இராணுவ ஆட்சியை விரும்புகிறதா எதிர்க்கட்சி

## நாமல் கேள்வி

(கொழும்பு)

முழுமையான இராணுவ ஆட்சிக்குச் செல்வது அல்லது ஜனநாயக ஆட்சிக்குச் செல்வது ஆகிய இரண்டு வழிகளே உள்ளன என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.



நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் ஜனநாயக நீரோட்டத்திற்குச் செல்லும் நோக்கில் தேர்தலை நடத்த நாடாளுமன்றத்தை கலைத்துள்ளனர். எதிர்க்கட்சியில் உள்ள இரண்டு தரப்பினரும் எப்படியாவது தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்றே முயற்சித்து வருகின்றனர்.

தமது ஆட்சிக் காலத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியாத ஐக்கிய தேசியக் கட்சி கொரோனா வைரஸிற்கு மத்தியில் எப்படி தேர்தலை நடத்துவது என்பது குறித்து தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குகிறது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)


## ஏலவிற்பனை

ஜி.எச்.ஏ.டி.சில்வா அன் கோ 89A, பெரியகடை வீதி, மன்னார்

நிறுவனத்தில் 01.01.2018 தொடக்கம் 31.03.2018 வரையான காலப்பகுதியில் வைக்கப்பட்ட அடகு நகைகள் யாவற்றையும் 18.07.2020 இற்கு முன்பாக மீட்கவும். மீட்க முடியாதுவிட்டால் ஒரு பகுதி பணத்தைச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத்தவறின் 19.07.2020 இல் ஏலத்தில் விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றேன்.

தொ.பே:- 0770034139 (2905)


## கண்ணீர் அஞ்சலி



யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை ஆசிரியை திருமதி.தவச்செல்வி செல்வராசா அவர்களின் அன்புத் தாயார்

### அமரர்.நாகேஸ்வரி தம்பையா

அவர்கள் இறையடி சேர்ந்தார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (2889)

பாடசாலைச் சமூகம்
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை


## வைத்தியம்

தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டு பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடல் பருமன் குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு, மார்பு, கை) ஆண்மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு: Shan's Health Care
255, K.K.S. Rd. Kokuvil. T.P: 0770357307 (2845)


## பொன்சேகாவிடம் வாக்குமூலம்

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் சுமார் ஒரு மணித்தியாலம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.


கடந்த மார்ச் மாதம் 18 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்படும் வகையில் கருத்து வெளியிட்டதாக அவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையான அவரிடம் சுமார் ஒரு மணித்தியாலம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. (ஜ-4)

## மரண அறிவித்தல்

### அமரர்.வேலுப்பிள்ளை துரைராசா

மண்ணில்:- 27.06.1929
விண்ணில்:- 27.05.2020



அன்னார் அச்சுவேலியை பிறப்பிடமாகவும் கனடா ரொறண்ரோவை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதியரின் மூன்றாவது புதல்வனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கதிரவேலு (கதிரமலை), செல்லத்துரை (கிளாக்கர்) ஆகியோரின் சகோதரரும், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, இராசம்மா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சூரியகுமாரி, பாஸ்கரன் (கனடா), காலஞ்சென்ற சாந்தகுமாரி சுபாஸ்கரன் (சுவிஸ்), நகுலேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும். ஜெசி, தேவி, சுசி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தக்ஷாயினி, லக்சி, கோசிகாஜினி, பிறிட்னி தாரண்யா, நிறோஜன், அபிர்நயா, ஆர்த்தி, மிதுலா, ஆரணி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், கிறிஸின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 31.05.2020 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Chapel Ridge - Wood Bine - Avenue markham ரொறண்ரோவில் நடைபெறும்.

இரங்கல் தெரிவிக்கும் நிகழ்வு அச்சுவேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அச்சுவேலி (2914) தகவல்:-பெறாமகள் ம.மஞ்சுளா
T.P. 0772731040

## இராசிபலன்

30.05.2020
வைகாசி 17, சனிக்கிழமை
அட்டமி பிற்பகல் 5.10 மணிவரை
பூரம் பின்னிரவு 2.17 தொடக்கம்
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
சந்திராஷ்டமம்- திருவோணம்

வளவன்



மேஷம்

சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்.



ரிஷபம்

தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.



மிதுனம்

பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு, சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.



கடகம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.



சிம்மம்

குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், திடீர்ப் பயணமொன்று உருவாகலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.



கன்னி

அல்லச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், தேவையற்ற குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.



துலாம்

வருமானம் பெருக வழிசமைப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, பயணங்கள் கைகூடும் நாள்.



விருச்சிகம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.



தனுசு

வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி கிடைக்கும், தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.



மகரம்

ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், பிரயாண பயமுண்டு, குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலையுண்டு.



கும்பம்

குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.



மீனம்

நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, தொழில் போட்டிகள் மாறும்.

நமக்கு வேண்டிய அனைத்தையும் கடவுள் கொடுத்திருக்கிறார்.

# குற்றப்பட்டியலில் உள்ளவர்களுடன் ஒப்பந்தங்களை செய்தால் சமூகம் பாதிக்கும்

## சாவகச்சேரி நகர சபையில் தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எதிர் வரும் காலத்தில் நீதிமன்ற குற்றப் பட்டியலில் உள்ளவர்களுடன் குத்தகை விடயங்கள் கையாள மாட்டாது என்ற தீர்மானம் சாவகச்சேரி நகர சபையில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என நகரசபை உறுப்பினர் நிதிகேசன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் சாவகச்சேரி நகர சபையுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டிருந்தவர்களில் சிலர் சிறைத்தண்டனை அனுபவித்திருப்பதாகவும் அவர்கள் தற்போது கொரோனா அச்ச சூழ்நிலையில் ஊரடங்கு வேளைகளில் சட்டவிரோதமாக மாட்டினை இறைச்சியாக்குதல் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டியதனை அடுத்தே சபையில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-5-30)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழிபாடுகள் நடைபெற்றன.

(படம்:-குப்பிழான் செய்தியாளர்)



திருநெல்வேலி பரமேஸ்வரன் சந்தியில் டிப்பர்-கார் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. மேற்படி விபத்து தொடர்பாக தெரியவருவதாவது, பலாலி வீதியில் பயணித்த கார் வீதி ஓரத்திற்கு திரும்ப முற்பட்ட போது காரை டிப்பர் மோதியதில் கார் சேதமடைந்ததுடன் வேகக் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த மூன்று மோட்டார் சைக்கிள்களையும் மோதித்தள்ளி சேதத்திற்குள்ளாகியது. இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-5-26)

# காற்றின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட 123 குடும்பங்களுக்கு முற்பணமாக பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது

## யாழ்.அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(குப்பிழான்)

யாழ்.குடாநாட்டில் அம்பன் சூறாவளித் தாக்கத்தின் காரணமாகவும் அதன் பின்னர் தொடர்ச்சியாக வீசும் கடும் காற்றின் காரணமாகவும் வீடுகளில் சேதம் ஏற்பட்டதால் சுமார் 130 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட 130 குடும்பங்களில் ஏழு குடும்பங்களைத் தவிர மற்றைய அனைவருக்கும் தலா பத்தாயிரம் ரூபாய் நிதி முற்பணமாக வழங்கப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமைகள் தொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் காற்றின் தாக்கம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள வாழை, பப்பாசி செய்கையாளர்களுக்குரிய இழப்பை நாங்கள் மதிப்பீடு செய்து அவற்றை விவசாய அமைச்சுக்கும் துறை சார்ந்த பிரிவுகளுக்கும் திணைக்களங்களுக்கும் அனுப்பியுள்ளோம் எனவும் குறித்த இழப்புக்கள் தொடர்பில் தமக்கு பணிப்புரை வழங்கப்படுமிடத்து உடனடியாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-5-18)

# சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றாத பல பிரிவினரால் கொரோனா பரவும் அபாயம்

(கொழும்பு)

கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களின் கீழ் பல்வேறு பிரிவினருக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகள் இன்னமும் செயற்படுத்தப்படாத நிலைமை காணப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது சிலர் செயற்படுவதால் வைரஸ் பரவலைக் கட்டுபடுத்துவதில் சிக்கல் ஏற்படும் கொவிட்- 19 வைரஸைக் கட்டுப்படுத்த முன்னெடுத்த முயற்சிகள் மற்றும் உழைப்பு மேற்குறித்த செயற்பாடுகளால் வீணாக்கக்கூடும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# காற்றினால் சேதமடைந்த வீடுகளுக்கான முதற்கட்ட உதவி வழங்கப்பட்டது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் காற்றின் காரணமாக பாதிக்கப்பட்ட 62 வீடுகளின் உரிமையாளர்களுக்கு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மையத்தினால் முதற்கட்ட நிவாரண உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 13 பேரும் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 13 பேரும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 15 பேரும் மணலாறு பிரதேச செயலக பிரிவில் 4 பேரும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 14 பேரும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 3 பேருமாக மொத்தமாக 64 பேருக்கு இந்தக் கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



முல்லைத்தீவு மாவட்டத்தில் வீசிய கடும் காற்றுக் காரணமாக வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு இழப்பீட்டின் பெறுமதி 10 ஆயிரத்திற்கு உட்பட்டிருந்தால் இழப்பீட்டின் முழுத்தொகையையும் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட இழப்பீடுகளுக்கு 10 ஆயிரம் ரூபாவும் மிகுதி இழப்பீட்டுத் தொகை மதிப்பீட்டின் பின்னர் வழங்கப்படும் என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வெலிஓயா, கரைதுறைப்பற்று துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேசங்களில் வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் பயிர்ச் சேதமும் ஏற்பட்டமை குறிப்பிடத் தக்கது. (2-5-281)

# வேகக்கட்டுப்பாட்டையிழந்த வாகனம் தொலைபேசி இணைப்புத்தூணுடன் மோதியது

(கரணவாய்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனமொன்று தொலைபேசி இணைப்புத்தூணை மோதித் தள்ளியதுடன் அருகிலிருந்த வீட்டின் மதிலையும் உடைத்த சம்பவமொன்று வடமராட்சி யாக்கரு வீதியில் மருதங்கண்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொர்டர்பில் மேலும் தெரியவருவதாவது, அதி வேகமாக வந்த வாகனமொன்று வேகக்கட்டுப்பாட்டையிழந்து தொலைபேசித் தூணுடன் மோதுண்டதில் மற்றொரு மின்னிணைப்புத் தூணும் சேதமடைந்தது.

மின்னிணைப்புத் தூண் சரிந்ததில் அருகில் இருந்த வீட்டின் மதில் 10 அடிக்கும் மேல் சேதமடைந்தது.

குறித்த வாகனத்தைச் செலுத்தி வந்தவர்கள் தலைமறைவாகினர். இவ்விடயம் தொடர்பாக உடனடியாக நெல்லியடிப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு குறித்த வாகனத்தை கையகப்படுத்தி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்றனர் (2-5-8-60)

# மேலும் இரு கடற்படையினருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 2 பேருக்கு நேற்று முன்தினம் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 48 பேரிடம் கொரோனா தொற்று பரிசோதனைகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 2 பேர் பரிசோதனைகளின் பின்னர் தொற்றாளர்கள் என உறுதிப்படுத்தப்பட்டனர்.

இதன்போது முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த 11 பேர் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக உள்வாங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-5-8)

# இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்து; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் காங்கேசன்துறை வீதி பெற்றோல் நிலையத்திற்கு அருகில் இரு மோட்டார் சைக்கிள் மோதி விபத்திற்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.


இவ் விபத்தில் காயமடைந்த ஏழாலையைச் சேர்ந்த நா.தயாளன் என்பவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். விபத்துத் தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (2-4-5-26)

# மலையகத்தில் தொண்டமானின் உடல் மக்கள் கண்ணீர் மல்க அஞ்சலி

(கண்டி)

மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் உடல் கொழும்பிலிருந்து அவரது சொந்த ஊரான ரம்பொடை வேவண்டனில் உள்ள பூர்வீக இல்லத்தில் அஞ்சலிக்காக நேற்று எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் வீதியின் இரு மருங்கிலும் கூடியிருந்த பொது மக்கள் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி, அன்னாரின் பூதவுடலுக்கு கண்ணீர் மல்க மலர் தூவி தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர். அரசியல் பிரமுகர்கள் மக்கள் அஞ்சலியுடன் ஆறுமுகனின் உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அவரது. ரம்பொடை வேவண்டனில் உள்ள பூர்வீக இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்க ப்பட்டது. (ஜ-4)



# வாக்குச்சீட்டை அச்சிடத் தயாராகுங்கள்!

(கொழும்பு)

பொதுத்தேர்தலிற்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிட தயாராக இருக்குமாறு அரச அச்சுக் கூட்டுத் தாபனத்திற்கு, தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பொதுத் தேர்தல் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் தேர்தலுக்கான திகதி விரைவில் அறிவிக்கப்படவுள்ளதால், வாக்குச்சீட்டுக் களை அச்சிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவித்தல் கிடைத்தால், விரைவில் வாக்குச் சீட்டுகளை அச்சிட அரச அச்சகம் தயாராக உள்ளதாக அச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, கொரோனாவிற்கு பிற்கால சூழலில் வாக்குச்சீட்டில் சில மாற்றங்கள் இடம் பெறுமென்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ஜ-8)

# விவசாய உற்பத்திப் பொருட்களை ரயில்களில் கொண்டு செல்ல நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உற்பத்தி செய்யும் அரிசி,மரக்கறி, பழவகைகள் உள்ளிட்ட உற்பத்திப் பொருட்களை வர்த்தக நடவடிக்கைகளுக்காக கொண்டு செல்வதற்கு ரயில்களைப் பயன் படுத்துவது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு ரயில்வே பொது முகாமையாளருக்கு அமைச்சர் மகிந்த அமரவீர அறிவுறுத்தல் வழங்கினார்.

தற்போது மரக்கறி, பழ வகைகளை வர்த்தக நடவடிக்கைக்கு கொண்டு செல்லும் போது ஏற்படும் கழிவுகளுக்கான செலவுகளை வர்த்தகர்களே ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

இதேவேளை ரயில்கள் மூலம் விவசாய உற்பத்திகளை கொண்டு செல்லும் நடைமுறையினூடாக ஒரே நேரத்தில் அதிக அளவான பொருட்களை கொண்டு செல்ல முடிவதுடன் அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களையும் குறைக்க முடியும் என அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (ஜ-8)

# கரும்புலி உயிரிழப்பு

(மஸ்கெலியா)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்ஷபான வாழைமலைத் தோட்டத்தில் மீட்கப்பட்ட அரியவகை கரும்புலி உடவளவ வனவிலங்கு சிகிச்சை நிலையத்தில் உயிரிழந்துள்ளது.

வேட்டையாட விரிக்கப்பட்டிருந்த வலையில் இந்த கரும்புலி கடந்த 26 ஆம் திகதி சிக்கிய நிலையில் மஸ்கெலியா பொலிஸாரும் நல்லதண்ணி வன விலங்கு அதிகாரிகளும் இணைந்து இதனை மீட்டனர்.

சுமார் 8 வயதுடைய குறித்த கரும்புலி உயிருடன் மீட்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டாலும் காயங்கள் காரணமாக அந்த கரும் புலி நேற்றுக் காலை உயிரிழந்ததாக உடவளவ வனவிலங்கு சிகிச்சை நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஜ-8)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: 60 செவ் 1 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
நில அளவையாளர்
எதிர்பார்ப்பு: உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/7044

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 3
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/7049

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 7 செவ் 6 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
நிரந்தர தனியார் வேலை
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் பெண் (வெளிமாவட்டம்,தீவகம் வேண்டாம்)
தொ.இ: B/7051

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 176 cm
தகைமை/தொழில்: B.Sc, MBA, உதவி பதிவாளர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும்பெண்
தொ.இ: B/7062

**இவர்களுக்க மணமகன் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 44 1/2 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி
Management Assistant
எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன்
தொ.இ: G/7715

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: - செவ் 11 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: பட்டதாரி நிரந்தர அரச தொழில்
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/7720

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: செவ் 10 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் சுவிஸ் விரும்பத்தக்கது.
தொ.இ: G/7743

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா: - சூரி செவ் 7 இல்
தகைமை/தொழில்: M.B.B.S. Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Accountant, Engineer.விரும்பத்தக்கது
தொ.இ: G/7746

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# இலஞ்சம் பெற்ற பிரதேச செயலருக்கு மறியல்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில், சந்தேகத்தில் கைதான ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரை எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

சப்ரிகம வீதி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் உள்ள ஒப்பந்த வேலைகளை பெற்றுக்கொடுப்பதற்காக சுமார் 3 இலட்சம் ரூபாய் இலஞ்சமாகப் பெறப்பட்ட வேளையில் கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட பிரிவினரே இவர்களை நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை நேற்று மாலை, நீதி மன்றத்தில் ஆஜர்படுத்திய போதே இந்த உத்தரவை நீதிபதி பிறப்பித்தார்.

இவ்விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு நீதவான் நீதிமன்றில் விசாரிப்பதற்கு ஒப்புதல் அடிப்படையில் வழக்கு கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## ஏல விற்பனை

ஜி.எச்.ஏ.டி.சில்வா அன் கோ இல. 480 / B,A-9 வீதி, கிளிநொச்சி நிறுவனத்தில் 01.01.2018 தொடக்கம் 31.03.2018 வரையான காலப்பகுதியில் வைக்கப்பட்ட அடகு நகைகள் யாவற்றையும் 18.07.2020 இற்கு முன்பாக மீட்கவும். மீட்க முடியாது விட்டால் ஒரு பகுதி பணத்தைச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத்தவறின் 19.07.2020 இல் ஏலத்தில் விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றேன். (2905)

தொ.பேசி-077 0034133

## மணமக்கள் தேவை

1988 MBBS Dr.மணமகளுக்கு 1993 இல் பிறந்த ஜேர்மன் மணமகளுக்கும் படித்த பட்டதாரி மணமகன்மார், 1981 சூரியன், செவ்வாய் பாவமற்ற கனடா மணமகனுக்கு மணமகள், இலங்கையிலுள்ள மணமக்களுக்கு இலங்கையிலேயே மணமக்கள் தேவை. (2911)

0764752219, 0762049298, 0770237639

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–206

# படையெடுக்கும் பாலைவனத்து வெட்டுக்கிளிகள்!

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

"பனையாலை விழுந்தவனை மாடேறி மிதித்தது போல" என சிலேடையாக் கூறும் வழக்கம் எம்மத்தியில் உண்டு. ஆக மொத்தத்தில் நொந்து போயிருப்பவரை மீண்டும் நோகடிக்கின்ற கதையாக வருகின்றது எமக்கான இன்னொரு பேராபத்து. இது இம்முறை மனிதர்களில் நோயை ஏற்படுத்திய கொரோனா வைரஸல்ல. மாறாக மனிதர்கள் உயிர்வாழத் தேவையான அடிப்படை அம்சமான உண

மில்லியன் கணக்கிலான வெட்டுக்கிளிகள் அதனைத் தாண்டி இலங்கைப்பரப்பினுள் வருவதற்கு அதிக நேரமெடுக்காது. இதனால் நாம் முன்கூட்டியே அவதானமாக இருக்க எமது விவசாயப் பெருமக்களுக்கு அறிவூட்டல் அவசியமாகும்.

ஆனால் இதைப்பற்றி எமது விவசாயிகளுக்கு எவ்விதமான செய்திகளோ அல்லது விழிப்புணர்வுகளோ இதுவரையில் பாரியளவில் ஏற்படுத்தப்படவில்லை. இந்த விடயத்தில் நாம் மிகமிக கவன்மாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

மோசமாகத்தான் இருக்கும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

இவற்றினது இனப்பெருக்கத்தின் வீரியத்தை கணக்கிட்டால் பூமிப்பந்திலுள்ள தாவரங்களின் இருபது சதவீதத்தை விரைந்து உண்ணுமளவுக்கு இருக்கும் என பூச்சியியலாளர்கள் கருதுகின்றார்கள். அத்துடன் இவ்வாறு உண்ணும் போது அது இப்பூமியிலுள்ள மக்கள் தொகையின் பத்தில் ஒரு பகுதியினருக்கு உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்தி விடுவதனால் உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிடும்

இடமே வெறுமையான எதுவித பச்சையிலைகளும் இல்லாமல் உண்டு விடுகின்றன. அந்தளவுக்கு இவற்றினாலே ஏற்படும் சேதம் மிக அதிகமாகும்.

இவ்வாறான நிலையில் வெட்டுக்கிளிகளை அழிப்பதற்காக பலமுறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். வானூர்தி மூலம் இரசாயனங்களை தெளிப்பதாகவும் ஆனால் அதற்கும் இவ் வெட்டுக்கிளிகளை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாது அந்நாட்டு அரசாங்கங்கள் தவிக்கின்றன.

நொந்து போயிருக்கும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

219

வுற்பத்தியை அழித்தொழிக்க அந்த வைரஸின் தாக்கத்தினுள் நாம் இன்னும் அடிபட்டுக் கொண்டிருக்கையில் படையெடுக்கின்றன பாலைவனத்து வெட்டுக்கிளிகள்!. பாலைவனத்தில் கோடிக்கணக்கில் ஒரு செறிவான பரந்துபட்ட மழை மேகம் போல படையெடுக்கும் இவ்வாறான பூச்சிப்பீடையினத்தைச் சேர்ந்த சிறிய உணர் கொம்புள்ள வெட்டுக்கிளிகள் **(Short horned Grass hoppers)** ஆபிரிக்க தேசத்தில் முதலில் அதிகளவிலான சேதத்தை ஏற்படுத்திய பின்னர் வளைகுடா பகுதியூடாக நகர்ந்து ஆசிய நாடுகளின் பரப்பிற்குள் வந்தேறியிருக்கின்றன.





பாகிஸ் தான் தேசத்தில் இதனது சேதம் முழுமையாக உணரப்பட்டுள்ள நிலையில் தற்போது இந்தியாவில் இவற்றினது தாக்கம் அதிதீவிரமாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக கிழக்கு ஆபிரிக்க நாடுகளான கென்யா, எதியோப்பியா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளை முற்றுகையிட்ட இவ் வெட்டுக்கிளிகள் அந்த நாடுகளில் பாரிய சேதத்தை உண்டு பண்ணியுள்ளன. தாவரங்களை முழுவதுமாக தின்று ஏப்பமிடும் இவ்வாறான வெட்டுக்கிளிகள் பயிர்ச்செய்கையின் போது அவ்வப்போது சிறியளவிலான சேதங்களை உண்டுபண்ணுவ துண்டு. ஆனால்தற்போதுள்ள நிலைமையை கவனமாக அவதானித்தால் இந்திய தேசத்திற்குள் வந்திருக்கும் பல

வெட்டுக்கிளிகளைப் பொறுத் தவரையில் தற்போதுள்ள காலம் அதற்கு மிகவும் சாதகமான காலமாக உணரப்படுகின்றது. மழைகாலம் ஆரம்பித்தது போல ஆங்காங்கே மழைபெய்வதும் தென்னிலங்கையில் மழைவீழ்ச்சி அதிகமாக உணரப்பட்டுள்ள நிலையில் வெட்டுக்கிளிகள் விரைந்து இனப்பெருக்கத்திலீடுபட்டு அதிகளவில் அதுவும் மில்லியன் கணக்கில் பல்கிப் பெருகி விட வாய்ப்புக்கள் அதிகம். நாம் விரைந்து செயற்பட்டால் இதனது தாக்கத்தை ஓரளவிற்கேனும் குறைக்கலாம். தவறினால் இதனால் உணவுற்பத்தி மிகவும் பாதிப்படைய சாத்தியக்கூறுகள் அதிகமாகும்.

ஒரு சதுர கிலோமீற்றர் அளவில் தொகையாக வரும் வெட்டுக்கிளிகள் ஒருநாளில் 36 ஆயிரம் பேர் உண்ணக்கூடிய உணவைத் தின்று விடுமாம் என்றால் அவற்றின் வேகத்தைப் பாருங்களேன்: இப்படியே போனால் நிலைமை மிக

என்கிறார்கள் புலமையாளர்கள். ஒரு பக்கம் கொரோனா வைரஸின் தாக்கத்திலிருந்து விடுபட முடியாமல் இன்னமும் நாம் போராடிக் கொண்டும் எங்கே தொற்றி விடுமோ என்ற பயப்பீதியுடனும் எமது அன்றாட அலுவல்களை செய்ய வேண்டியிருக்கும் போது உணவினை உற்பத்தி செய்வதிலும் இடர்வரின் என் செய்வது. உலக உணவு மற்றும் வேளாண்மை நிலையத்தின் தகவல்படி பாலை வன வெட்டுக்கிளிகளின் பெருக்கம் முன்னைய காலங்களை விட அதீதமாக இருப்பதாகவும் ஆபிரிக்க நாடுகளில் இது பில்லியன் கணக்கில் ஒரு படைபோல் நகர்ந்து பச்சைத்தாவரங்கள் அனைத்தையும் உணவாக்கி ஏப்பமிடுகின்றன என்றால் அதனை பயிர்செய்த விவசாயியின் நிலையை எண்ணிப் பாருங்கள்.

பாரிய ஒரு கூட்டமாக வந்து முற்றுகையிடும் இவ் வெட்டுக்கிளிகள் ஓரிடத்தில் வந்தமரும் போது அந்த

விவசாயியின் விளைச்சலும் கைவந்து சேராவிட்டால் அவர்களால் அடுத்த பயிர்ச் செய்கைக்கு தாக்குப்பிடிக்க முடியாது போய்விடும்.

இர சாயனப் பாவிப்பு சூழலையும் அதிகளவில் மாசுபடுத்திவிடும் என்பதனால் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துப் போயிருக்கின்றனர் மக்கள். அதிகளவிலான செலவில் கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்தினாலும் இவ் வகை வெட்டுக்கிளிகள் தம்மை தக்கவைப்பதற்கான அனைத்து வழிமுறைகளைப் பயன்படுத்துவதனாலும் இந்தப் பிரச்சினை தற்போது பூதாகரமாக எழுந்திருகின்றது. கொரோனாவினால் பஞ்சம் பட்டினி தலைதூக்க வாய்ப்புள்ளதாக உலகளாவிய விஞ்ஞானிகளிடமிருந்து அறிக்கைகள் வந்த வண்ணமே இருக்கின்றன. அவ்வாறாயின் நாம் எவ்வகை முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதனை கவனத்திற் கொள்க.

வெட்டியுண்ணும் வாயுறுப்பைக் கொண்ட வெட்டுக்கிளிகளின் உடல் கடினமானது ஆகும்.

எந்தக் கால நிலையிலும் தம்மை பாதுகாத்துக் கொள்ள தேவையான பலவற்றையும் அவை வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

பறந்து செல்வதற்கான இருசோடி இறகுகளைக் கொண்டிருந்தாலும் பின் சோடி இறகுகளால் இவை இலகுவாக பறந்து திரியக் கூடியன. அவற்றின் இளைய பருவங்கள் நிறைவுடலிகளைப்போல இருந்தாலும் அவற்றுக்கு நன் றாக வளர்ந்த வெட்டுக்கிளிகளைப் போல இறகுகள் கிடையாது.

இருப்பினும் அவை விரைந்து பரவலடையக் கூடியன. மிகவும் அடர்த்தியான கூட்டமாக வரும் இந்த வெட்டுக்கிளிகளை சமாளிப்பது கடினமெனவும் கூறப்படுகின்றது.

இவ்வாறான அதிகளவில் வெட்டுக்கிளிகளைப் பார்ப்பவர்கள் விரைந்து இதுபற்றி தெரிவிக்க வேண்டும். இதன் மூலம் வெட்டுக்கிளிகளினால் ஏற்படும் தாக்கத்தை சமாளிக்க முடியும். கொரோனாவினால் உணவுப்பஞ்சம் வரும் என முன்கூட்டியே எதிர்வுகூறப்பட்டிருக்கும் நிலையில் வெட்டுக்கிளிகளின் தாக்கமும் அதிகரித்தால் நிலைமை இன்னும் மோசமாகிவிட சாத்தியமுண்டு.

நாம் அனைவரும் இன்னும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

# குறைந்த விலையில் நெல்லை விற்று குந்தகம் செய்து விட்டது கடந்த அரசு

## விசாரணை வேண்டும் என்கிறார் யாப்பா

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தும் சபையிலிருந்த நெல்லை கடந்த அரசாங்கம் 24 ரூபா வீதம் குறைந்த விலைக்கு விற்று நாட்டுக்கு நட்டத்தை ஏற்படுத்தியது தொடர்பாக முழுமையாக விசாரணை நடத்த வேண்டுமென முன்னாள் இராஜாங்க அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன வலியுறுத்தினார்.

பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரிசி விலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லை கடந்த அரசு குறைந்த விலைக்கு தனியாருக்கு விற்று விட்டது.

அதனால் நாம் ஆட்சியை பொறுப்பேற்கையில் நெல் சந்தைப்படுத்தும் சபையில் ஒரு மணி நெல்கூட இருக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

நெல்லை கிலோ 24 ரூபாய் வீதம் விற்று நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கினார்கள். இது தொடர்பில் விசேட விசாரணையை நடத்துமாறு அரசிடம் கோருகிறோம். இதனால் நாட்டிற்கு பாரிய நட்டம் ஏற்பட்டது என்று அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# 277 இலங்கையர்கள் நாடு திரும்பினர்



(மின்ஸ்க்)

பெலாரஸ் நாட்டில் இருந்து 277 இலங்கையர்கள் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானத்தில் நாடு திரும்பியுள்ளனர்.

குறித்த பயணிகள் நேற்று முன்தினம் இரவு பெலாரஸ் மின்ஸ்க் நகர் விமான நிலையத்தில் இருந்து வந்த ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யூ.எல் 1206 ரக விசேட விமானத்தில் நாட்டை வந்தடைந்தனர். இவ்வாறு, அவர்கள் விமான நிலையத்தை வந்தடைந்ததன் பின்னர், இலங்கை விமானப் படையினரால் கிருமி தொற்று நீக்கம் செய்யப்பட்டதுடன் கொரோனா தொற்று அறிகுறிகள் உள்ளதா? என்றும் பரிசோதிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் குறித்த இலங்கையர்கள் அனைவரும் இலங்கை இராணுவத்தினரால் விசேட பேருந்து ஊடாக தனிமைப்படுத்தல் செயற்பாட்டிற்காக தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ-4)

# பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு 2500 கறவை மாடுகள் இறக்குமதி

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிலிருந்து 2500 கறவை மாடுகளை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியதாக அமைச்சரவை இணைப்பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூர் கால்நடை வளர்ப்பாளர்களை ஊக்குவிக்கும் விதமாக குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது நாட்டில் நாளாந்தம் 1.2 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் நாளாந்தம் 3.5 மில்லியன் லீற்றர் பால் தேவைப்படுகிறது. பால்மா இறக்குமதி செய்வதற்காக பாரியளவு நிதி ஒதுக்கப்படுகிறது. இதனால் உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாளாந்தம் பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் இதற்கு முன்னதாக பல தடவைகள் அவுஸ்திரேலியாவிலிருந்து கறவை மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டன.

இதேவேளை அவுஸ்திரேலியாவிலிருந்து மாத்திரம் ஏன் கறவை மாடுகள் இறக்குமதி செய்யப்படுகின்றன? என்பது குறித்து கணக்காய்வாளர் நாயகம் கேள்வியெழுப்பியிருந்தார்.

குறித்த விடயத்தில் மோசடி இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டதால் அது தொடர்பில் கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அவுஸ்திரேலியாவிலிருந்து கறவை மாடுகள் இறக்குமதி செய்ததால் உள்ளூர் பசுக்களும் நோய்வாய்ப்பட்டன. அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட கறவை மாடுகளும் நோய்வாய்ப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

# கடற்படையைச் சேர்ந்த 708 பேருக்கு கொரோனா

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)


கடற்படையைச் சேர்ந்த 708 பேருக்கு இதுவரையில்கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். நாட்டில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் 415 பேர் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் நாட்டில் சமூகத் தொற்றினால் 406 பேருக்கு மாத்திரமே கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

தொற்றுக்குள்ளான கடற்படையினர் தங்கியிருந்த முகாம்கள் அனைத்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

தேவையான சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-8)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2048

### மதி




ஒரு ராஜா பிறக்கவில்லை, படைக்கப்படுகிறார்

### லத்தீஸ்




வெற்றி எப்போதும் எளிதானது அல்ல

### சங்கீத்




ஏன்டா சிரிக்கிற.... மச்சி இவனுங்க நாளைக்கு செவ்வாய்க்கிரகத்தில கால் வைப்போம்னு சொன்னாங்க... இன்னைக்கு வீட்டுக்கு வெளியிலகூட கால் வைக்க முடியல. அதை நினைச்சேன்... சிரிச்சேன்...!

### சாரா



24 மணி நேரமும் கோவிலில் இருக்கும் பிச்சைக்காரனுக்கு காட்டிடாத ஒரு நல்ல வழியை கடவுள் பக்தனுக்கு காட்டிடவா போகிறான்

### டினா



எங்கே நாம் அதிகம் காயப்படுகிறோமோ அங்கே தான் நம் வாழ்க்கையின் பாடம் தொடங்குகிறது

### மிது



வீட்டுக்குள்ளேயே இருந்தா கொரோனா போகுதோ இல்லையோ போனைப் பார்த்துப் பார்த்து கண்ணு தெரியாமப் போகப் போகுது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடக்கு-கிழக்கு இணைப்புக் கோரிக்கைக்கு அரசு அடிக்கும் சாவு மணியே தொல்பொருள் செயலணி

## சிவசக்தி ஆனந்தன் காட்டம்

(நெளுக்குளம்)

**வடக்கு-கிழக்கு இணைப்புக் கோரிக்கைக்கு அரசு அடிக்கும் சாவுமணியே ஜனாதிபதி செயலணி என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**



ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண தொல்பொருள் பகுதிகளை பாதுகாப்பதற்கு ஜனாதிபதி விசேட செயலணி அமைத்துள்ளமையையும், அதற்கு பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற கமால் குணரட்ன நியமிக்கப்பட்டுள்ளமையையும் எவ்வாறு பார்க்கின்றீர்கள்? எனும் கேள்விக்குப் பதிலளித்த அவர்,

உண்மையிலேயே இது வொரு கட்டமைக்கப்பட்ட இன வழிப்புத் திட்டத்தின் நீட்சியே. தமிழர் தாயகத்தில் பௌத்தத்தின் பெயரால், தேசியப் பாதுகாப்பின் பெயரால், வன, நிலங்கள், தொல்பொருள் பகுதிகளைச் சிங்களப் பேரினவாதிகள் அகலக்கால் பதித்து வருகின்றார்கள். தமிழர்களின் பூர்வீக நிலத்தினை முழுமையாக பறித்து சிங்கள தேசமாக மாற்றியமைப்பதற்கு பல்வேறு முனைப்புக்களைச் செய்து வருகின்றார்கள்.


அவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தில் புனித பூமி என்ற பெயரில் பௌத்த விகாரைகள் அமைப்பதற்காக பௌத்த மத சின்னங்கள் ஆகியவற்றை மையப்படுத்தி காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய அம்பாறையில் 247 இடங்களும், திருகோணமலையில் 74 இடங்களும், மட்டக்களப்பில் 28 விகாரைகள் உட்பட 55 இடங்கள் பௌத்த மதத்துடன் தொடர்புடைய தொல்லியல் இடங்களாக அடையாளப்படுத்தியுள்ளனர்.

இந்த விடயத்தினை தனியே கிழக்கு மாகாணத்தினை மட்டும் மையப்படுத்தி பார்க்க முடியாது. வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் என்பதும் வடக்கையும் கிழக்கையும் இணைக்க வேண்டும் என்பது தமிழர்களின் நீண்ட கால கோரிக்கை.

1932ஆம் ஆண்டிலிருந்து சிங்களவர்கள் கிழக்கு நோக்கிய நகர்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்தனர். கந்தளாய், கல்லோயா, மகாஓயா, தீகவாபி திட்டம், துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்று அபிவிருத்திட்டங்களின் போர்வையில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கினர்.

இத்தகைய பின்னணிகளை வைத்துப் பார்க்கின்ற போது, மீண்டும் ராஜபக்ஷ அரசு ஆட்சிக்கு வந்துள்ள நிலையில் கிழக்கு மாகாணத்தில் தான் விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்து இலக்கை அடைவதற்கு விளைகின்றமை வெளிப்படுகின்றது.

இந்த முயற்சிகளுக்கு தொல்பொருளின் பெயரால் காய்நகர்த்தப்படுகின்றது. அதனை கச்சிதமாக செய்து முடிப்பதற்கும், அது தொடர்பில் பொதுமக்கள் உள்ளிட்ட தரப்பினர் கேள்வி கேட்காது அடக்குமுறைக்குள் வைத்திருப்பதற்காக படைத்தரப்பு களமிறக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (2-5-299)




# கொக்குத் தொடுவாய்,எரிந்த காடு விவசாய நிலங்களில் விவசாய நடவடிக்கை மேற்கொள்ள வனவளத் திணைக்களம் தடை

## விவசாயிகள் கவலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய், எரிந்தகாடு மானாவாரி விவசாய நிலங்களைத் துப்புரவு செய்வதற்காக காணி உரிமையாளர்கள் சென்றபோது, குறித்த விவசாய நிலங்களைத் துப்புரவு செய்ய முடியாதென வனவளத் திணைக்களத்தினர் தடுத்துள்ளனர்.

இந்த விவசாய நிலங்களைத் துப்புரவு செய்து மானாவாரி நெற்செய்கையினை மேற்கொள்வதற்கு உரிய அதிகாரிகள் அக்கறை செலுத்த வேண்டுமென அப்பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து சுமார் முப்பதாண்டுகளுக்குப் பின் தமது இடங்களில் மீளக் குடியேறியிருப்பதாகவும், தற்பொழுது விவசாய நிலங்கள் அனைத்தும் பாரிய காடுகளாக காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

எனவே, தாம் தமது விவசாய நிலங்களைத் துப்புரவு செய்து, விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வனவளத் திணைக்களம் தடை விதித்துள்ளது.

இந்நிலையில் எரிந்த காடு (சகலாத்துவெளி) என்னுமிடத்தில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட செயலகத்தாலும், உரிய அரச அதிகாரிகளாலும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த பகுதியில் கடந்த 2012ஆம் ஆண்டிலிருந்து மானாவாரி விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. அதற்கமைய குறித்த விவசாய நிலங்களை முற்கூட்டியே சீரமைப்பு செய்வதற்கென நாம் கனரக வாகனங்களுடன் அப்பகுதிக்குச் சென்றவேளை, குறித்த விவசாய நிலங்களைத் துப்புரவு செய்ய முடியாதென வனவளத் திணைக்களத்தினர் தடை விதிக்கின்றனர் எனத் தெரிவித்தனர். (ஜ-5)

# இரத்ததான முகாம்

(அக்கராஜன்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான் முகாம் இன்று 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை கிளிநொச்சி பழைய வைத்தியசாலை மண்டபத்தில் இடம் பெறும்.

ஆர்வமுள்ளவாகள் கலந்து கொண்டு இரத்தத்தினை வழங்குமாறு கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாகவே இவ் இரத்ததான முகாம் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள்தெரிவித்துள்ளனர்.(2-5-350)



வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்தில் முல்லைத்தீவு மாவட்ட 59 ஆவது இராணுவப்படையணியினரின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு அவலோன் நிறுவனத்தின் அனுசரணையுடன் 30 வேப்ப மரக்கன்றுகள் அண்மையில் நாட்டப்பட்டன. (படம்-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றாத உணவகங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை



(குருமன்காடு)

வவுனியா பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்று முன்தினம் வவுனியா நகர்ப்பகுதி உணவகங்கள் மற்றும் மதுபான சாலைகள் மீது திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கொவிட்-19 வைரஸ் தாக்கம் காரணமாக பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் உணவகங்கள், வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்கு வவுனியா பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணக்கம் தெரிவித்தனர்.


இந்நிலையில் நேற்று முன்தினம் சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் அடங்கிய குழுவினர் வவுனியா நகரப் பகுதி உணவகங்கள் , மதுபான சாலைகளுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது உணவகங்களுக்கு வருகை தருகின்ற வாடிக்கையாளர் கைசுத்தம் செய்வதில்லை , கூட்டாக இருந்து உணவருந்துவது , மருத்துவ சான்றிதழ் இன்றி பணியாளர்கள் , காலாவதியான உணவுப் பொருட்கள், முகக்கவசம் சீராக அணியாமை போன்ற பல்வேறு செயற்பாடுகளை அவதானித்த அக்குழுவினர் குறித்த உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொண்டது டன் சில உணவகங்களுக்கு எச்சரிக்கையும் விடுத்தனர். (2-5-250)

# சுதந்திரத்திற்குப் பின் இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

05

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



| பாராளுமன்றத் தேர்தல் 1952 | | | | | |
|---|---|---|---|---|---|
| | வேட்பாளர்கள் | | | | |
| A-போட்டியிட்டோர்<br>B- தெரிவு செய்யப்பட்டோர்<br>C- தோல்வி அடைந்தோர்<br>D- போடப்பட்டமொத்த வாக்குகள் | A | B | C | D | % |
| ஐக்கிய தேசிய கட்சி | 81 | 54 | 27 | 1,026,005 | 44.08% |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 48 | 9 | 39 | 3,61,250 | 15.52% |
| லங்கா சமசமாஜகட்சி | 39 | 9 | 30 | 3,05,133 | 13.11% |
| விப்லவக்காரி லங்கா சமசமாஜக்கட்சி | 19 | 4 | 15 | 134,528 | 5.78% |
| தொழிற்கட்சி | 5 | 1 | 4 | 27,096 | 1.16% |
| அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | 7 | 4 | 3 | 64,512 | 2.77% |
| இலங்கைத் தமிழரசுக்கட்சி | 7 | 2 | 5 | 45,331 | 1.95% |
| பௌத்த குடியரசுக் கட்சி | 3 | 0 | 3 | 3,987 | 0.17% |
| குடியரசுக் கட்சி | 9 | 0 | 9 | 33,001 | 1.42% |
| சுயேட்சை | 85 | 12 | 73 | 326,783 | 14.04% |
| மொத்தம் | 303 | 95 | 208 | 1,661,243 | |


அதைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான சேர்.ஜோன் கொத்தலாவல பிரதமராகப் பதவியேற்றார்.

அரசியலமைப்பின்படி நியமிக்கப்பட்ட ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு தமிழர் நியமிக்கப்பட்டார். அவர் எஸ்.பி. வைத்திலிங்கம் ஆவார். இலங்கையரான இவர் அரச சபையில் **(State Council)** 1931 இலிருந்து 1946 வரை தலவாக்கலை தொகுதியை பிரதிநிதித்துவம் செய்தவர். இவர் இந்திய மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார். இதற்கு இலங்கை வாழும் இந்திய மக்களிடமிருந்து எதிர்ப்புக்கள் வந்தன.

பிறகு பிரதமராவதற்கு முயற்சி எடுத்தபோதும் அது சரிவராது போகவே அவர் இலங்கை சுதந்திரக் கட்சியை உருவாக்கினார்.

இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து ஜோன் கொத்தலாவல தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி தனது செல்வாக்கை இழக்கத் தொடங்கியிருந்தது. இதற்கிடையில்,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆங்கிலத்தை ஆட்சி மொழியில் இருந்து அகற்றி சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவதாக அறிவித்தது. இக்கோரிக்கையை ஆரம்பத்தில் எதிர்த்து வந்த ஐக்கிய தேசியக் கட்சி பின்னர் 1956 இன் ஆரம்பத்தில் ஏற்றுக் கொண்டது. இதனால் அது சிறுபான்மை இலங்கைத் தமிழரின் செல்வாக்கை இழந்தது.

**இரண்டாவது பாராளுமன்றம் (பிரதிநிதிகள் சபை)**
**09 ஜூன் 1952-18 பெப்ரவரி 1956**

| பிரதமர்<br>டட்லி சேனநாயக்க | பிரதமர்<br>சேர் ஜோன் கொத்தலாவல | எதிர்க்கட்சித் தலைவர்<br>எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்க | சபாநாயகர்<br>சேர் அல்பேட் எஃப் பீரிஸ் |
|---|---|---|---|
|  |  |  | சேர் அல்பேட் எஃப் பீரிஸ் |

### இலங்கையின் பாராளுமன்றத் தேர்தல் 1956

இலங்கையின் 3ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1956 ஏப்ரல் 5 முதல் ஏப்ரல் 10 வரை நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு 95 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது. நீண்டகாலமாக இலங்கையை ஆண்ட ஐக்கிய தேசியக் கட்சிக்கு இத்தேர்தல் ஒரு பெரும் சவாலாகக் காணப்பட்டது. பாராளுமன்றத்தின் முன்னாள் தலைவர் எஸ்.டபிள்யூ.ஆர். டி பண்டாரநாயக்க, முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கவின் மரணத்திற்குப்

திரொட்ஸ்கியவாதிகளான லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்களம், தமிழ் இரண்டும் ஆட்சி மொழியாக்க வேண்டும் எனக் குரல் கொடுத்தன. தமிழ்க் கட்சிகள் ஆங்கிலத்தை ஆட்சி மொழியாகத் தொடர வேண்டும் எனக் கேட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க சிறிய மார்க்சிசக் கட்சிகளுடன் ஒரு தேர்தல் கூட்டணியைக் கூட்டி ஒருங்கிணைந்த மக்கள் ஐக்கிய முன்னணி (மகாஜன எக்சத் பெரமுனவை) என்ற கட்சியை உருவாக்கினார். எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கவின் கூட்டணி அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியமைத்தது. எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க பிரதமர் ஆனார். 1956 ஏப்ரல் 12 இல் பண்டாரநாயக்கவின் அமைச்சரவை பதவியேற்றது. எதிர்க்கட்சித் தலைவராக டாக்டர். என். எம்.பெரேரா இரண்டாவது முறையாக தெரிவு செய்யப்பட்டார். இத்தேர்தலின் போது இலங்கை சுதந்திரக் கட்சியினரின் சிங்கள தேசியவாதப் பரப்புரைகள் சுதந்திர இலங்கையில் இனங்களுக்கிடையே பகையை உருவாக்கிய முதலாவது நிகழ்வாகக் கருத்தப்பட்டது. நியமனம் செய்யப்பட்ட 6 பாராளுமன்ற உறுப்பினர்களில் இந்தியத் தமிழர் சார்பில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் நியமனம் செய்யப்படவில்லை.

பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்டதை அடுத்து டபிள்யூ. தகநாயக்க 26 செப்டெம்பர் 1959 ஆம் ஆண்டு பிரதமராக் நியமிக்கப்பட்டார். ஆனாலும் ஆளும் கூட்டணிக் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட பிளவுகளை அடுத்து டபிள்யூ. தகநாயக்க பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல், மார்ச் 1960

இலங்கையின் 4ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1960 ஆம் ஆண்டு மார்ச் 19 இல் நடைபெற்றது. இத்தேர்தலின் போது இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு இணங்க இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த அங்கத்தவர்கள் எண்ணிக்கை 157 ஆகும். இதில் 151 பிரதிநிதிகள் 145 தேர்தல் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர். மீதமான 6 பிரதிநிதிகளும் பிரதமரின் ஆலோசனைப்படி மகாதேசாதிபதியால் நியமிக்கப்படுவர். 1960 ஆம் ஆண்டு மார்ச், 1960 ஆம் ஆண்டு ஜூலை, 1965, 1970 ஆம் ஆண்டுத் தேர்தல்களிலும் இதே எண்ணிக்கைதான் பின்பற்றப்பட்டது.

முதலாவது பாராளுமன்றத் தேர்தல் 19 நாட்களிலும் 2ஆவது பாராளுமன்றத் தேர்தல் 4 நாட்களிலும் 3ஆவது பாராளுமன்றத் தேர்தல் 3 நாட்களிலும் நடைபெற்ற போதிலும் கூட ஒரே நாளில் நடத்தி முடிக்கப்பட்டதேர்தலாக 4ஆவது பாராளுமன்றத் தேர்தலைக் குறிப்பிடலாம்.

1960 ஆம் ஆண்டளவில், இலங்கையின் ஆளும் மகாஜன எக்சத் பெரமுன (எம்.ஈ.பி) கூட்டணி பிளவடையும் நிலையில் இருந்தது. நெற்காணிப் பிரச்சினையில் கூட்டணியில் இருந்த சிறிய மார்க்சியக் கட்சிகள் கூட்டணியில் பெரும் கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் முரண்பட்டு விலகின. இன்னும் ஒரு மார்க்சியக் கட்சியான விப்லவகாரி லங்கா சமசமாஜக் கட்சி புதிய கட்சி அமைத்து மக்கள் ஐக்கிய முன்னணி (மகாஜன எக்சத் பெரமுன) என்ற பெயரை எடுத்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முந்தைய ஆண்டில் படுகொலை செய்யப்பட்ட தலைவர் எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கவின் மறைவிற்குப் பின்னர் பிளவடைந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டைத் தேர்தலில் கொண்டிருந்தன. இந்தியத் தமிழர் அனைவரையும் நாட்டை விட்டு வெளியேற்ற இரண்டு கட்சிகளும் தேர்தல் வாக்குறுதிகளைத் தந்தன. அத்துடன் சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல்படுத்தவும் உறுதி பூண்டன. டட்லி சேனநாயக்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல்களில் அதிக இடங்களைக் கைப்பற்றியது. ஆனாலும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் நிலையான ஆட்சியை அமைக்க முடியவில்லை. எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெற்றதை அடுத்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. (தொடரும்)

# "மக்களே முதன்மையானவர்கள்" கொள்கையில் சமரசம் செய்ய முடியாது

## ஜனாதிபதி கோட்டா திட்டவட்டம்



(கொழும்பு)

**"மக்களே முதன்மையானவர்கள்" என்ற எமது கொள்கையில் சமரசம் செய்ய முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதிப்படத் தெரிவித்தார்.**

கனடா, ஜமைக்கா மற்றும் ஐ.நா. பொதுச்செயலாளர் ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்ட கொவிட்-19 மற்றும் அதற்குப் பின்னரான காலங்களில் அபிவிருத்திக்கான நிதியுதவி குறித்த உயர்மட்ட நிகழ்விற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து காணொளி மூலம் உரையாற்றிய போதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "முதலாவதாக, இந்த அழிவுகரமான வைரஸால் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், தன்னலமின்றி முன்னணியில் நின்று பணியாற்றுவோருக்கு எனது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகளாவிய வர்த்தகம், சுற்றுலா, முதலீடுகள் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவை ஸ்தம்பிதமடைந்துள்ளன. தொற்று நோய் நிலைமையானது நிலையான வர்த்தகங்கள் மற்றும் பொருளாதாரங்களை திடீரென சீர்குலைத்து, நிலையற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது.


உண்மையான பொருளாதாரம் வருமானம் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவதில்லை என்பதால் அரசிறை வருமானப் பற்றாக்குறையை முறையாகக் குறைத்து வரும் நாடுகள் பின்னடைவைச்சந்தித்துள்ளன. வீழ்ச்சியடைந்து வரும் போக்கில் இருந்த கடன் தலை கீழ் மாற்றத்தைக் கண்டுள்ளது.

செயற்படாத சொத்துக்கள் உயர்ந்து திரவத்தன்மை நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால் வங்கித்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. முழு சேமிப்பு முதலீட்டு சமன்பாடு சரிவடைந்துள்ள காரணத்தினால் அபிவிருத்திக்கு நிதியளித்தல் என்பது உலகப் பொருளாதாரத்திற்கு பொருத்தமான தலைப்பாக உள்ளது.

தொழிலாளர் வருமானம், ஏற்றுமதி சார்ந்த வருமானம், சுற்றுலா மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சேவைகள் மூலம் இலங்கையின் பிரதான பரிமாற்ற வழிகள் எமது உண்மையான பொருளாதாரத்தை பாதித்துள்ளன. வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார இழப்பு பாரியது.

நாம் மிகவும் மதிக்கும் ஒரே சொத்து மனித அபிவிருத்தி என்பதால் எத்தகைய சிரமங்களை நாம் எதிர்கொண்டாலும் மக்களே முதன்மையானவர்கள என்ற எமது கொள்கையில் சமரசம் செய்ய முடியாது என அவர் மேலும் திட்டவட்டமாகத் தெரிவித்தார். (ஜ-4-8)

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு



(திருமலை)

பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் முஹம்மட் சாட் கட்டாக் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.

சந்திப்பின் நிறைவில் செய்தியாளர்களுக்கு தமது விஜயம் தொடர்பாக உயர்ஸ்தானிகர் தெரிவிக்கையில்,

இரு நாடுகளுக்கு இடையில் நீண்டகாலமாக நல்லதோர் புரிந்துணர்வு இடம்பெற்று வரும் இந்நிலையில் கிழக்கு மாகாணத்திற்கான விஜயத்தின் ஊடாக மாகாணத்தில் உள்ள அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் தாம் உதவுவதற்கு தயாராக இருப்பதாகவும் கிழக்கு மாகாணத்தின் வர்த்தக நடவடிக்கைகளை கட்டியெழுப்புவது தொடர்பாகவும், புலமைப்பரிசில் திட்டங்கள் தொடர்பாகவும், கிழக்கு சுற்றுலாத்துறையினை மேம்படுத்துவது குறிப்பாக சமயம் சார்ந்த சுற்றுலாத் துறையின் விருத்தி தொடர்பாகவும் இச்சந்திப்பின் போது தாம் கலந்துரையாடியதாக தெரிவித்தார். (ஜ-4)

# வெலிசர முகாமிலுள்ள அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு

## கடற்படைப் பேச்சாளர் தகவல்

(வெலிசர)

வெலிசர கடற்படை முகாமில் உள்ள அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படைப் பேச்சாளர் இசுரு சூரியபண்டார நேற்று தெரிவித்துள்ளார்.

வெலிசர முகாமிலிருந்த அனைத்து கடற்படையினரும் நாட்டின் பல பகுதிகளில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று அவர்களது குடும்பத்தினரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் இசுரு சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

வெலிசர முகாமில் சுமார் 4 ஆயிரம் கடற்படையினர் காணப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)



# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## குருவைத் தேடி...

ஒருத்தர் இருந்தார். அவருக்கு ஒரு குருநாதர் தேவை. நமக்கு நல்ல வழிகாட்டுவதற்கு ஒரு குருநாதர் கிடைப்பாரா என்று ஏங்கினார். பல நாள் தவித்தார். ஒருத்தரும் கிடைக்கிற வழியாக தெரியவில்லை.

அவருடைய மனைவி ஒரு யோசனை சொன்னார்.

"இதோ பாருங்கள்...நாங்கள் இரண்டு பேரும் இப்ப புறப்பட்டு காட்டுக்குப் போவோம். நடுக்காட்டிலே ஒரு நடைபாதை வழியாக உட்கார்ந்து கொள்வோம். அந்த வழியாக நமக்கு முன்பு வருகிற முதல் மனுசன் யாரோ அவனையே குருவாக எடுத்துக் கொள்வோம் என்ன சொல்கிறீர்கள்?" என்றார்கள். இவரும் சரி என்று ஒத்துக்கொண்டார்கள்.

உடனே அவர்கள் இரண்டுபேரும் புறப்பட்டு காட்டுக்குப் போனார்கள். நடுக்காட்டிலே ஒரு பாதை ஓரமாக உட்கார்ந்தார்கள். அப்போது திருடன் ஒருத்தன், தான் களவாடிய பொருட்களோடு அந்த வழியாக வந்தான். இவர்கள் பார்த்து விட்டார்கள். அவ்வளவுதான். உடனே ஓடிப்போய் அவன் காலிலே விழுந்தார்கள். அவன் காலை கெட்டியாகப் பிடித்து விட்டார்கள்.

"எங்களை வாழ வைக்க வந்த வள்ளலே நீங்கள் தான் எங்களுக்கு குருநாதரா இருந்து ஒரு நல்ல வழியைக் காட்ட வேண்டும். எங்கள் மனதிலே உள்ள பாவங்களைப் போக்க வேண்டும். ஒரு நல்ல மார்க்கத்தை காட்ட வேண்டும்" என்று வேண்ட ஆரம்பித்து விட்டார்கள்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன இது...பழியாவத்துக்கு அஞ்சாமல் வழிப்பறி செய்கிறது நம்ம தொழில் இவர்களுக்கு நாம் எப்படி வழிகாட்டுறது" என்று யோசித்தார்.

"சரி உண்மையைச் சொன்னால்தான் இவர்கள் நம்மை விடுவார்கள் போல இருக்கு" என்று நினைத்து..."ஐயா நான் ஒரு திருடன். நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லை" என்றான்.

"அதெல்லாம் இல்லை. நீங்கள் தான் எங்கள் குருநாதர்" என்று உறுதியாக இருந்தார்கள் அவர்கள்.

திருடன் பார்த்தான். தப்பிப்பதற்கு என்ன வழியென்று யோசித்தான். "சரி நீங்கள் இரண்டு பேரும் அப்படியே பத்மாசனம் போட்டு உட்காருங்கள். கண்ணை மூடிக்கொள்ளுங்கள். நான் சொல்கிற வரைக்கும் நீங்கள் அப்படியே உட்கார்ந்திருக்க வேண்டும்" என்றான்.

குருநாதர் கட்டளையாக அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்து விட்டார்கள்.

இவன் பார்த்தான்...இதுதான் சமயம் என்று மெதுவாக அங்கேயிருந்து நழுவி ஓடியே போய்விட்டான்.

இவர்கள் இரண்டு பேரும் இப்படியே உட்கார்ந்திருக்கிறார்கள்.

இவர்களுடைய மன உறுதி கடவுளையே யோசிக்க வைத்ததாம். உடனே இறைவனும் இறைவியும் இவர்கள் முன்னால் வந்து நின்று காட்சி கொடுத்தார்கள்.

"இது மாதிரி நாங்கள்தான் வந்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். "பக்தர்களே எழுந்திருங்கள்" என்று சொன்னார்.

ஆனால் அவர்களோ "பெருமானே" எங்களுடைய குருநாதர் அனுமதி இல்லாமல் இந்த இடத்தை விட்டு நகர மாட்டோம் என்றார்கள்.

இறைவனுக்கே இது ரொம்ப சிக்கலாகப் போய்விட்டது. உடனே அந்த நாட்டு அரசன் கனவிலே இறைவன் தோன்றி சிறையிலே இருக்கிற திருடனை விடுதலை செய் என்று சொன்னார். திருடனுடைய கனவிலேயும் தோன்றி விபரத்தைச் சொன்னார். திருடன் விடுதலையானதும் நேராக அந்தக் காட்டுக்குப் போனான். அவர்கள் அப்படியே உட்கார்ந்திருக்கிறார்கள். இன்னும் கண்ணை மூடிக் கொண்டே... "உங்கள் குருநாதர் வந்திருக்கிறேன். கண்ணைத் திறவுங்கள்" என்றான். அப்போதுதான் அவர்கள் கண்ணைத் திறந்தார்கள்.

இவன் நடந்தது முழுவதையும் சொன்னான்.

அப்போது ஆகாயத்திலேயிருந்து ஒரு குரல் கேட்டதாம். உங்களுடைய தீவிர குருபக்தி போற்றுதற்குரியது. குருவிடம் பக்தி, பணிவு, நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் எதையும் பெறுவார்கள். அப்படியே நீங்களும் அடைவீர்கள் என்றது அந்தக் குரல். தம்பதியருக்கு ஞானத் தெளிவு வந்ததாம். அந்தத் திருடனும் திருந்தி நல்லவனாக ஆகிவிட்டானாம்.

இது வாரியார் சுவாமிகள் சொன்ன கதை.

"நம்பிக்கை" எப்படிப்பட்ட நல்ல விளைவுகளையெல்லாம் ஏற்படுத்துகிறது என்பதை இதிலேயிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

குருவைத் தேடி காட்டுக்குப் போன இன்னொருத்தனுடைய கதை உங்களுக்குத் தெரியுமா? இவன் இந்தக் காலத்து இளைஞன். ஒரு நடுக்காட்டுக்குப் போய்விட்டான். யாரும் கிடைக்கவில்லை. அதுமட்டுமில்லை வழிகாட்டுறதுக்கு ஒரு குருவைத் தேடி வந்தவன் இப்ப வந்த வழியையே மறந்து விட்டான். திரும்பிப் போறதுக்கு வழி தெரியவில்லை. எப்படியோ வீட்டுக்குப் போனால் போதும் என்று ஆகிவிட்டது. ஒன்றும் புரியவில்லை. பசி , தாகம், பயம் இரண்டு நாளாக ஆட்டுகிறது.

நல்லவேளையாக அந்த வழியாக ஒரு ஆள் வந்தான். இவன் ஓடிப்போய் அவன் கையைப் பிடித்துக்கொண்டு...

"ஐயா நான் இந்த நடுக்காட்டிலே வழிதவறி காணாமல் போய் இரண்டு நாள் ஆகிவிட்டது. நல்லவேளை என்னுடைய அதிர்ஷ்டம் உங்களை சந்தித்து விட்டேன்" என்றான் உற்சாகமாக.

இதுக்கு அவன் ரொம்ப சந்தோசப்படாதீர்கள். ஏனென்றால் நான் காணாமல் போய் நான்கு நாள் ஆகிவிட்டது என்றான்.

எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்று நீங்கள் நினைக்கும்போது ஒன்றை மட்டும் மறவாதீர்கள். நிச்சயம் எதிர்காலம் என்று ஒன்று உண்டு. அதற்கு இழப்பென்பது இல்லை ~ *கிராண்டன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குறைந்த வட்டிக் கடன்களை மறைப்புச் செய்யும் வங்கிகள்

வட மாகாணத்தில் இயங்கக்கூடிய அநேகமான வங்கிகள் குறைந்த வட்டிக் கடன்களை மறைப்புச் செய்கின்ற மிக மோசமான செயலைச் செய்வதாக புத்திஜீவிகளும் சமூக நலன் மீது அக்கறை கொண்டவர்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

பொதுவில் வட மாகாணத்தில் இயங்குகின்ற அநேகமான வங்கிகள் தென்பகுதியில் உள்ள தலைமைகளுக்கு விசுவாசமாக நடந்து கொள்வதையும் அதனூடாகப் பதவியுயர்வுகளைப் பெற்றுக் கொள்கின்ற ஏற்பாடுகளையும் செய்வதில் தீவிரம் காட்டுகின்றனவே தவிர,

போரினால் பாதிக்கப்பட்ட வட புலத்துத் தமிழ் மக்கள் குறைந்த வட்டியில் கடன்களைப் பெற்று சுயமுயற்சிகளில் ஈடுபடவோ அன்றி விவசாயம், கைத்தொழில், வர்த்தக முயற்சிகளில் ஈடுபடுவதற்கோ சந்தர்ப்பம் வழங்குவதில்லை.

தவிர, வடபுலத்து மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகக் குறைந்த வட்டிக் கடன்களை எம் மக்களுக்கு வழங்க வேண்டும் என்று கருதுகின்ற வங்கி உத்தியோகத்தர்களின் கருத்துக்களை உதாசீனம் செய்கின்ற அளவிலேயே நிலைமை உள்ளதாகவும் கூறப்படுகிறது.

மாறாக, உயர்ந்த வட்டி வீதத்தைக் கொண்ட கடன்களை வங்கி அலுவலகங்களில் விளம்பரப்படுத்தியும் வர்த்தகர்களுக்குத் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியும் உயர்ந்த வட்டி வீதத்தைக் கொண்ட கடன்களை வழங்குவதில் வட பகுதியில் இயங்கும் அநேகமான வங்கிகள் முனைப்புக் காட்டுவதால், வடபகுதி மக்களின் உழைப்பும் ஊதியமும் வட்டி என்ற பெயரால் கறந்தெடுக்கப்படுகிறது என்ற கருத்துக்களையும் புத்திஜீவிகள் முன்வைத்துள்ளனர்.

இதற்கு மேலாக வடபகுதியில் இயங்கும் விவசாயத் திணைக்களம் போன்ற அமைப்புகள் விவசாய முயற்சிகளுக்காக வழங்கப்படும் சலுகைக்கடன்களை வடபகுதி விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்கவோ அன்றி குறித்த தகவல்களை விவசாயிகளுக்குத் தெரியப்படுத்துவதிலோ கவனம் செலுத்துவதில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில் வட பகுதியில் உள்ள வங்கிகளும் விவசாயக் கடன் பற்றிய அறிவித்தல்களை வெளிப்படுத்தாத நிலையில், மிகக்குறைந்த வட்டி வீதத்தை உடைய் கடன்கள் எதுவும் வட பகுதி மக்களுக்குக் கிடைக்கவில்லை.

இதன்காரணமாக மேற்குறிப்பிட்ட வட்டி குறைந்த கடன்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் முழுமையும் தென்பகுதி மக்களுக்கே சென்றடைகிறது.

எனவே இத்தகைய நிலைமைகளை மாற்றியமைக்க வடபகுதியில் இயங்கும் வங்கிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் நம் மக்கள் சார்ந்த கோரிக்கையாகும்.

# சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவின்றி பெரும்பான்மை வாக்குகளை பெறுவோம்

## எஸ்.பி.திஸாநாயக்க சூளுரை

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான வாக்கைப் பெற்று பலமான அரசாங்கத்தை அமைக்கும் என முன்னாள் பாராளுமனற உறுப்பினர் எஸ்.பி. திஸா நாயக்க சூளுரைத்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திபில்கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முரண்பாடுகள் தற்போது தீவிரமடைந்துள்ளன. ரணில் அணி, சஜித் அணி என்ற இரு தரப்பினர் ஒன்றிணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிட்டாலும் வெற்றிபெற முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக் கொண்ட வாக்குகள் பொதுத் தேர்தலில் அவர்கள் பெறும் வாக்கை முன்கூட்டியே தெரியப்படுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சிஜனாதிபதித் தேர்தலில் ஒன்றிணைந்து பெற்றுக் கொண்ட வாக்கைக் காட்டிலும் மிகக் குறைவான வாக்கைப் பெற்று படுதோல்வி அடை யும்.

சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் பொதுஜன பெரமுன பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான வாக்கைப் பெற்று பலமான அரசாங்கத்தை ஸ்தாபிக்கும்.

பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலில் தோலவியடைந்த தேர்தல் தொகுதிகளில் பொதுத்தேர்தலில் வெற்றி பெறுவதற்கான திட்டங்கள் முறையாக வகுகக்கப்பட்டுளான என அவர்மேலும தெரிவித்தார். (ஜ-4)

# ஐ.தே.கட்சியிலிருந்து எம்மை இடைநிறுத்த முடியாது-திஸ்ஸ

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்துவத்திலிருந்து எம்மை இடைநிறுத்த முடியாது என்றும் கட்சியின் செயற்குழுவின் பெரும்பான்மை எமக்கே உள்ளது என்றும் எம்மை கட்சி அங்கத்துவத்திலிருந்து இடைநிறுத்தி இருப்பது தொடர்பாக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் 60 பேர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் 40 பேர் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள்.

வெறும் 20 செயற்குழு உறுப்பினர்களால் எம்மை கட்சியிலிருந்து நீக்க முடியாது. இதைத் தவிர ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் அங்கீகாரத்துடனே ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டு தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்கப்பட்டது.

இது தொடர்பான எழுத்து மூல ஆவணங்கள் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் உள்ளது. ஐ.தே.கவிலிருந்து 97 உறுப்பினர்கள் விலக்கப்பட்டுள்ளனர்.

எனினும் அது குறித்து எமக்கு சட்டபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. உத்தியோகபூர்வ அறிவிப்பு கிடைக்கப்பட்ட பின்னர் சட்ட நடவடிக்கை எடுப்போம். ஐ.தே.க. செயற்குழுவின் பெரும்பான்மை எமக்கே உள்ளது. அதனால் எங்களை அவர்களால் கட்சியிலிருந்து நீக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## மீளத் திறக்கப்பட்ட பாடசாலைகள் மீண்டும் மூடப்பட்டன

(சியோல்)

தென் கொரியாவில் கொரோனா வைரஸ்தொற்று மீண்டும் அதிகரித்துள்ளதால் திறக்கப்பட்ட பாடசாலைகள் மீண்டும் மூடப்பட்டன.

நேற்று முன்தினம் புதிதாக 56 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

தென்கொரியாவில் கடந்த இரண்டு மாதங்களாக கொரோனாத் தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படும் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்ட போதிலும் நேற்று முன்தினம் சடுதியாக அதிகரித்து 79 ஆகப் பதிவாகியுள்ளது.

மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலேயே புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதால் தொற்று மேலும் பரவும் அபாயம் உள்ளதால் 200 இற்கும் அதிகமான பாடசாலைகள் மூடப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ஜ-2-5-8)

## குணமடைந்தோர் 754

(கொழும்பு)

நாட்டில் நேற்றைய தினம் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 9 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் மூலம் நாட்டில் குணமடைந்தவர்களின் எண்ணிக்கையானது 754 ஆக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளான ஆயிரத்து 530 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

அதேவேளைகொரோனா தொற்றினால் இலங்கையில் இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## தேசிய கண் வைத்தியசாலைக்கு முற்பதிவுகளை மேற்கொண்ட பின்னர் வருகை தருமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

கொழும்பு தேசிய கண் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வருவோர் முற்பதிவு செய்த பின்னர் வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இதன் காரணமாக அத்தியாவசிய மற்றும் அவசரத் தேவைகளுக்காக மாத்திரம் தேசிய கண் வைத்தியசாலைக்கு வருகை தருமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

சிகிச்சைகளைப் பெற வருகை தரும் நோயாளர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக 011 768 2741, 011 768 2554 ஆகிய தொலைபேசி இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொண்டு முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும் என சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்தது. (ஜ-8)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**தர்மம் ஒன்றுதான் இறந்த பிறகும் வாழ்கிறது; மற்றவைகள் அனைத்தும் உடலுடன் நாசமடைகின்றன. - ஆஸ்கர் வைல்ட்**

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### பிரபஞ்ச நியதி



பிரபஞ்சத்தின் ஒரு சிறு பகுதியில் என்ன இருக்கிறதோ அது பிரபஞ்சம் முழுவதும் இருக்கும் என்பதை நாம் காணமுடியும். ஏனென்றால் பிரபஞ்சத்தை முழுவதுமாக எடுத்துக் கொண்டால் அது எந்த அமைப்பில் உருவாக்கப்பட்டிருக்கிறதோ அதே அமைப்பில் தான் அதன் ஒவ்வொரு பகுதியும் கட்டப்பட்டிருக்கும் என்பது பிரபஞ்ச நியதி. எனவே பிரபஞ்சம் என்று நாம் வழங்கும் இந்தத் தூலப் பொருளான அமைப்பிற்குப்பின்னால் நுண்ஜப் பொருளான ஒரு சூட்சுமப் பிரபஞ்சம இருக்க வேண்டும். இதையே நாம் சிந்தனை என்கின்றோம்.

இதற்குப் பின்னாலும் ஆன்மா என்று ஒன்று இருக்க வேண்டும். இதுவே இந்தச் சிந்தனைகளெல்லாம் எழுவதற்கு ஆதாரம். இதுவே மற்றப் பிரபஞ்சத்தை ஆளும் அரசன் என்று நாம் நினைப்பது இயற்கைதானே. இப்படி ஒவ்வொரு உடலுக்கும் மனதிற்கும் பின்னால் இருக்கும் ஆன்மாவை ஜீவான்மா என்றும் இதை இயக்குகின்ற பிரபஞ்ச ஆன்மாவை இறைவன் என்றும் அழைக்கிறோம்.

# கொரோனா பீதியில் அதிரும் பிரேஸில் ஒருநாளில் மட்டும் 24 ஆயிரம் பேர் பாதிப்பு


(ரியோடி ஜெனிரோ)


பிரேஸில்நாட்டில்கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் மட்டும் ஆயிரத்திற்கும் அதிகமானோர் பாதிப்படைந்துள்ளனர்.

கொரோனா வைரஸின் தாக்கம் உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனா தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

அமெரிக்காவை தொடர்ந்து, பிரேஸில் இரண்டாம் இடத்தில் உள்ளது. பிரேஸில் நாட்டில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு ஒரேநாளில் 24 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிப்படைந்துள்ளனர். அங்கு கொரோனாத் தொற்று பாதிப்பு எண்ணிக்கை 4 லட்சத்தைத் தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேபோல், பிரேஸிலில் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 27 ஆயிரத்தை நெருங்குகின்றது. கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 93 ஆயிரத்தைத் தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)





# சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்த கையொப்பமிட்டார் டொனால்ட் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

சமூக ஊடக நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் ட்ரம்ப் கையெழுத்திட்ட செயலாக்க ஆணை சட்டரீதியிலான சவால்களை எதிர்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தவறான தகவல்களை டுவிட்டரில் பதிவு செய்ததை டுவிட்டர் நிறுவனம் அம்பலப்படுத்தியது.

இதற்குப் பதிலடி கொடுத்த ட்ரம்ப், தங்கள் குரல்களை சமூக ஊடகங்கள் முடக்கப் பார்ப்பதாக எச்சரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், சமூக ஊடக இணையத்தளங்களுக்கு இருக்கும் சில சட்டப்பூர்வ பாதுகாப்புகளை நீக்க வகை செய்யும் செயலாக்க ஆணையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

பேஸ்புக், டுவிட்டர் உள்ளிட்ட நிறுவனங்கள் தங்களது தளங்களில் பதியப்படும் உள்ள டக்கங்களை மேற்பார்வை செய்யும் விதத்திற்காக அவற்றின் மீது சட்டரீதியிலான நடவடிக்கையை அரசு எடுப்பதற்கு இது வழிவகை செய்கிறது.

அதேசமயம் இந்த செயலாக்க ஆணை சட்டரீதியிலான சவால்களை எதிர்கொள்ளும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சமூக ஊடக இணையத்தளங்களுக்கான பாதுகாப்புகள் குறித்த தற்போதைய சட்டரீதியில்லா புரிதலை மாற்றும் பணியில் அமெரிக்க நாடாளுமன்றம் அல்லது நீதி அமைப்புகள் ஈடுபட வேண்டும் என்று சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். (2-5)

# சீனாவின் தேசிய பாதுகாப்புச் சட்டத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டம்

(ஹொங்கொங்)

சீனாவில் கொண்டுவரவுள்ள புதிய பாதுகாப்புச் சட்டத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரி வித்து ஹொங்கொங் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சீன அரசு புதிய தேசிய பாதுகாப்பு சட்டத்தைக் கொண்டு வரவுள்ளது. இதுதொடர்பானவரைவு சட்ட மசோதாவிற்கு பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த புதிய சட்டமானது, சீனாவின் சிறப்பு நிர்வாக பகுதியான ஹொங்கொங்கின் சுதந்திரத்தைப் பாதிப்பதாக கூறி பொதுமக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.




இந்த போராட்டம் வன்முறை மோதலாக வெடிக்கத் தொடங்கியுள்ளது. போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே ஆங்காங்கே மோதல் நடைபெறுகிறது.

போராட்டம் நடத்தும் மக்கள் மீது பொலிஸார் தண்ணீரை பீய்ச்சியடித்தும், கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் விரட்டியடித்தனர். பொலிஸார் மீது போராட்டக்காரர்கள் கையில் கிடைத்த பொருட்களை எடுத்து வீசுகின்றனர். இப்போராட்டம் தொடர்பாக 300க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.


போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்காக ஹொங்கொங் முழுவதும் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் பதற்றமான சூழல் நிலவுகிறது.

பிரிவினைவாதம், பயங்கரவாதம் மற்றும் வெளிநாடுகளின் தலையீட்டை தடுப்பதே இந்தச் சட்டத்தின் நோக்கம் என சீன அரசு தெரிவிக்கிறது.

ஆனால் இந்த சட்டத்தை கொண்டு வருவது, வன்முறை மோதல்களை அதிகரிப்பதுடன், அமெரிக்காவிடமிருந்து பதிலடியையும் தூண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (2-5)

## 1100 ஆண்டுகள் பழைமையான

# மண்ணுக்குள் புதையுண்ட மகா சிவலிங்கம் மீட்பு



(ஹனோய்)

வியட்நாமில் 1100 ஆண்டுகள் பழைமையான சிவலிங்கம் ஒன்று இந்திய தொல்லியல் துறை ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

வியட்நாமின் குவாங் நாம் மாகாணத்தில் உள்ள மைசன் பகுதியில் இந்திய தொல்லியல் துறை மேற்கொண்ட ஆய்விலே, குறித்த பழைமையான சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

அங்குள்ள சாம் கோயில் யுனெஸ்கோவின் உலக புராதனப் பகுதியாக இக்கோயில் கெமர் பேரரசின் மன்னர் இரண்டாம் இந்திரவர்மன் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது.

இந்த சாம் கோயில் வளாகத்தில் நடத்தப்பட்ட இந்திய தொல்லியல்துறை ஆய்வாளர்களின் ஆய்வில், 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரே கல்லால் செய்யப்பட்ட சிவலிங்கம் மண்ணுக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது பற்றி இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறுகையில், இந்திய தொல்லியல் துறை ஆராய்ச்சியாளர்களின் இந்த சிறந்த கண்டுபிடிப்பால், இந்தியா - வியட்நாம் இடையே இருக்கும் கலாசார உறவு மேம்படும் என்றும் இரு நாடுகளுக்கும் இடையேயான நாகரீக தொடர்பு வெளிப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (2-5)

# சவுதியில் கொரோனா பாதிப்பு 80 ஆயிரத்தைத் தாண்டியது

(ரியாத்)

கொரோனா அச்சுறுத்தல் எதிரொலியாக, சவுதி அரேபியாவில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்நாட்டின் சுகாதாரத்துறை தெரிவித்தது.

சீனாவில்உருவானகொரோனா வைரஸின் தாக்கம் உலகின் பல்வேறு நாடுகளில் பரவி அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த பல நாடுகளிலும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சவுதி அரேபியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 80 ஆயிரத்தை கடந்துள்ளது.

நேற்று முன்தினம் அங்கு 1,644 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, சவுதி அரேபியாவில் கொரோனா பாதிப்பு 80,185 ஆக அதிகரித்துள்ளது.

ஒரே நாளில் 16 பேர் பலியானதை அடுத்து, அங்கு பலி எண்ணிக்கை 441 ஆக உயர்ந்துள்ளது என அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. (2-5)

## இரத்ததானம்...

வாரங் களாக தேவையான குருதி போதிய அளவில் கிடைக்கவில்லை என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித் தார்.

இதனால் குருதிக் கொடையாளர்கள் இரத்ததானம் செய்வதற்கு முன்வர வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில வாரங்களாக இரத்த வங்கிக்கு தேவையான குருதி போதிய அளவில் கிடைக்கவில்லை.

இது தவிரவும், வழமையாக நடைபெறுகின்ற இரத்ததான முகாம்கள் தற்போதைய சூழ்நிலை காரணமாக நடைபெறவில்லை.

ஆகவே, குருதிக் கொடையாளர்கள் வைத்தியசாலை இரத்த வங்கியை தொடர்பு கொண்டு குருதிக்கொடை செய்யும்படி கேட்டுக் கொள்கின்றேன். எல்லா வகையான குருதிகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

0212223063, 0772105375 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு குருதிகளை வழங்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## இரு வேறு சம்...

யில், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காதல் விவகாரம் காரணமாக கற்பகபுரம் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் படுகாயமடைந்துள்ளதுடன், அலகல்லு பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையின் விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவங்கள் தொடர்பாக, வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,299)

## தொண்டமானின்...

நள்ளிரவு 12 மணி வரை ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும்.

இக்காலப்பகுதியில், நுவரெலியா மாவட்டத்தில் இருந்து ஏனைய மாவட்டங்களுக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எனினும் அத்தியாவசிய தேவைகளுக்காக மக்கள் வெளியில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மரண வீட்டிற்கு மக்கள் சுகாதார கட்டுப்பாடுகளையும் மீறி சென்று வருகின்றமை தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## குரும்பசிட்டி...

பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குரும்பசிட்டிப் பகுதியில் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பாவனையற்ற காணி ஒன்றினை அதன் உரிமையாளர் சுத்தம் செய்து வேலி அடைக்கும்போது, நேற்று முன்தினம் குறித்த குண்டுகள் காணப்பட்டதனால் அது தொடர்பில் விசேட அதிரடிப் படையினருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து குண்டுகள் மீட்கப்பட்டன.

அதுபோல நேற்றும் அந்தக் காணிக்கு அயற்காணியிலிருந்து குண்டுகள் பொலிஸ் மற்றும் அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டன. இதில் பல்வேறு வகையான குண்டுகள் உள்ளடங்குகின்றன.

கடந்த சில வாரங்களாக இப்பகுதியில் இருந்து குண்டுகள் மீட்கப்பட்டு வருவது தெரிந்ததே. (ம-3,104)

## இந்திய உயர்ஸ்...

வாய்ந்த நிகழ்வாக கடந்த மே 14ஆம் திகதி வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக அவர் தனது நற்சான்றுப் பத்திரத்தை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

சந்திப்பின் பின் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, இரு நாடுகளுக்குமான ஒத்துழைப்பின் மூலம் புதிய துறைகளை கண்டறிந்து இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை ஜனாதிபதி இந்திய உயர்ஸ்தானிகரிடம் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை இந்தியப் பிரதமருடன் தொலைபேசியூடாக மேற்கொண்ட சுமுகமான உரையாடலை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, தற்போதைய கஷ்டமான சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு வழங்கிய உதவி தொடர்பில் இந்திய அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தனது நன்றியைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார். (ம-3)

## ஐக்கிய தேசியக்...

செயற்குழு நேற்று ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம், அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிக்கும் நிலையில் வேறு கட்சியின் ஊடாக வேட்புமனுக்களை தாக்கல் செய்ய கட்சியின் செயற்குழு அனுமதி வழங்கவில்லை என்பதால், அவ்வாறு வேட்புமனுக்களை தாக்கல் செய்த 99 பேரை கட்சியில் இருந்து நீக்குவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கபீர் ஹாசிம், லக்ஷ்மன் கிரியெல்ல, ஹரின் பெர்னாண்டோ, சரத் பொன்சேகா, ரஞ்சன் ராமநாயக்க, ரஞ்சித் மத்துமபண்டார, நளின் பண்டார, முஜிபுர் ரஹ்மான், எஸ்.எம். மரிக்கார் உட்பட பல முக்கியஸ்தர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எது எப்படி இருந்த போதிலும் அரசாங்கத்தின் தேவைக்கு அமையவே ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறான நடவடிக்கையை எடுக்க தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் குற்றம் சுமத்தியுள்ளனர். (ம-3)

## பிரபாகரன்...

**கேள்வி :** பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் போன்றோருடன் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தம் சற்று கடினமானதாக இருந்ததா ?

**பதில் :** 17 ஆம் திகதி இரவு இடம்பெற்ற யுத்தமே மிகவும் பலம்வாய்ந்ததாக இருந்தது. அன்றை தினம் இரவு புலிகளால் பாதுகாப்பு செயலாளரின் இருப்பிடத்தின் ஒரு பகுதி உடைக்கப்பட்டது. இதன் பின்னர் 18ஆம் திகதி மாலை வரை நடைபெற்ற யுத்தம் மிகுந்த அபாயமானது. தனது பாதுகாப்புப் படையுடன் பிரபாகரனே இறுதி யுத்தத்திலும் பங்கேற்க வேண்டி வந்தது.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் எமது படைகள் மீது நடத்தப்பட்டன. அவர்களிடம் காணப்பட்ட அனைத்தையும் கொண்டு தாக்கினர். அதுபோன்ற ஆபத்தான யுத்தமே இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றது.

அடுத்த 24 மணித்தியாலங்களில் யுத்தம் நிறைவடையப் போகிறது என்று அனைவரும் அறிந்திருந்தாலும் நிறைவுக்கு கொண்டு வரும் போராட்டத்தில் பலர் மரணிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

யார் மரணிப்பது ? யார் எஞ்சுவது என்ற நிலைமையே காணப்பட்டது. படை வீரர் ஒருவருக்கு ஏதேனுமொரு பணிப்புரையை விடுக்கும்போது அது இலகுவானதல்ல என்பது எமக்குத் தெரியும்.

எனினும் வீரர் கள் யாரும் அதைப் பற்றி கவலையடைய வில்லை. அதன் காரணமாகவே இராணுவ வீரர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்று நான் இன்றும் பெரும்பாலான இடங்களில் கூறுவதற்கு காரணமாகும்.

**கேள்வி :** ஆனால் அந்த சந்தர்ப்பத்தில் சர்வதேசம் பிரபாகரனை பாதுகாக்க முயற்சிப்பதாகக் கூறப்பட்டதே?

**பதில் :** ஆம். பிரபாகரனைப் பாதுகாப்பதற்கு சர்வதேசத்தினால் பெரும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போதுள்ள ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அது பற்றி நன்றாகத் தெரியும். அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சர்வதேச அழுத்தத்தினால் யுத்தத்தை இடைநிறுத்த வேண்டியேற்படுமா என்று நாம் வினவிய போது அதற்கு ஒரு போதும் நாம் இடமளிக்க மாட்டோம் என்று உறுதியளித்தார்.

**கேள்வி :** மே19ஆம் திகதி எந்த சந்தர்ப்பத்தில் பிரபாகரனுடைய சடலம் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை நீங்கள் அறிந்தீர்கள்?

**பதில் :** 18ஆம் திகதி மாலை நாடு மீட்கப்பட்டது. அதனை நாம் இராணுவத் தளபதிக்கு அறிவித்தோம். அதனை அவர் ஜனாதிபதிக்கு அறிவித்ததன் பின்னர் ஜனாதிபதியால் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் 19ஆம் திகதி அனைத்தும் மேற்பார்வை செய்யச் சென்ற போது அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. ஜெனரல் கமால் குணரத்ன எமக்கு அறிவித்தபோது நாம் நேரில் சென்று அதனைப் பார்வையிட்டோம்.

**கேள்வி :** இறுதி கட்டத்திலாவது ஏன் அவர் தன் உயிரை மாய்த்துக் கொள்ளவில்லை. அவர் அந்தளவிற்கு ஒரு கோழையா?

**பதில் :** அது பற்றி எமக்குத் தெரியாது. தெரியாதவை பற்றிக் கூற முடியாது. கருணா அம்மான் மற்றும் தயா மாஸ்டர் ஆகியோர் பிரபாகரனது சடலமா என்பதை உறுதிப்படுத்துவதற்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் உறுதிப்படுத்தினர். (ம-3)

## யாழில் நேற்று...

கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நேற்றைய பரிசோதனையில் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் த.சதியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ம-3,18)

## மட்டுவில் பன்றித்...

வில் ஊரடங்கு அமுலில் இருந்த வேளை திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலய பிரதம சிவாச்சாரியார் வீட்டில் அதிகாலை இடம்பெற்றுள்ளது.

அயலில் உள்ள ஆலயத்தில் அலங்கார திருவிழா இடம்பெற்றுவரும் நிலையில் வேலை நிமிர்த்தம் சிவாச்சாரியார் வீட்டை விட்டு வெளியே வந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வீட்டினுள் நுழைந்து ஒளிந்து கொண்ட திருடர்கள் ஒன்பதே முக்கால் பவுண் தங்க நகைகளையும் ஐம்பதாயிரம் ரூபாய் பணத்தினையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

திருடர்கள் கையுறை மற்றும் முகக் கவசம் ஆகியன அணிந்தே திருட்டில் ஈடுபட்டுள்ளனர் என பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-3,30,31)

## முகநூல் காதலி...

பணத்தினையும் பறித்துச் சென்றுள்ளனர்.

கொக்குவில் பொற்பதிப் பகுதியில் நேற்று நடந்துள்ளதாக கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் இளைஞருடைய தலையில் காயம் ஏற்பட்டுள்ளது என்றும், சிகிச்சைக்காக அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஆவரங்கால் பகுதியில் உள்ள குறித்த இளைஞர் முகநூலில் ஒரு பெண்ணுடன் தொடர்பு கொண்டு உரையாடி வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று மதியம் இருவருமயாழில் உள்ள கிறீம் கவுஸ் ஒன்றில் சந்திப்பதாகப் பேசிக் கொண்டுள்ளனர்.

இதன்படி, குறித்த இருவரும் பேசி வைத்தபடி நேரத்திற்கு அங்கு வந்துள்ளனர். இருப்பினும் அந்த பெண் அங்கு வரவில்லை.

இந்நிலையில், அங்கு 3 மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் தாங்கள் பொலிஸ் என்று அடையாளப்படுத்திக் கொணடதுடன், குறித்த இளைஞரை விசாரிக்க வேண்டும் என்றும் அதனால் தங்களுடன் வருமாறு கூறி மோட்டார் சைக்கிளில் இழுத்து ஏற்றியுள்ளனர்.

அங்கிருந்து கொக்குவில் பொற்பதி வீதிககு வந்த அந்தக் கும்பல், அங்குள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு பின்னால் வைத்து குறித்த இளைஞரை தாக்கியுள்ளனர்.

அத்துடன் அவரிடம் இருந்த கைத்தொலைபேசி மற்றும் பணத்தினை பறித்துள்ளனர். அவர்களிடம் இருந்து தப்பி ஓடிய குறித்த இளைஞர் அப்பகுதியில் உள்ள வீடொன்றில் முன்னால் விழுந்துள்ளார்.

சிறிது நேரம் அங்கு நின்ற அந்த இளைஞர் குழு பின்னர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

இதன் பின்னர் தலையில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் இரத்தம் வழிந்தவாறு வீதிக்கு வந்த இளைஞர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வந்த கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-3,114)

## 1558...

குள்ளான 28 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பதோடு, 09 பேர் குணமடைந்துள்ளனர். (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 29-05-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2437
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 10 11 38 51
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/05/29
சீட்டிழுப்பு இலக்கம் 4143
ஆங்கில எழுத்து D
வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 1 1 4 6 6
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 932
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.05.29
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,005,370/-
வெற்றி இலக்கங்கள் 08 32 66 77
ஆங்கில எழுத்து Q
வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக 2020.04.03 என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம் உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 2818
வர்ணம் கருநீலம்
திகதி 29/05/2020
வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக 03/04/2020 என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.
வெற்றி இலக்கங்கள் 16 36 40 61 விருச்சிகம்
டபுள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 8887
ரூ.100 பரிசுக்குரிய 380
வளமான வாழ்விற்கு சுபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

## கதியால்கள் தேவை

முற்கிளுவை, கற்கிளுவை, பத்துப் பத்தாகக் கட்டியபடி பெரிய கதியால்கள் தேவை. தொடர்புகளுக்கு :

(C-9643) **076 714 8059**

## வேலையாட்கள் தேவை

பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் உடனடியாகத் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழில் சார்ந்த நபர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (C-9614)

**076 635 6560 / 075 055 6560**

மீண்டும்



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் **100%** பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

(C-9625)

### அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 6113

### அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்



இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 3536


# திருட்டில் ஈடுபட்ட மூவர் முச்சக்கரவண்டியுடன் கைது

## வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

குளோரின் விற்பதாக தெரிவித்து திருட்டில் ஈடுபட்ட மூவரை முச்சக்கர வண்டியுடன் கைது செய்துள்ளதாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மூவரும் மகாறம் பைக்குளம் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியா, உக்கிளாங்குளம் மற்றும் பண்டாரிக்குளம் ஆகிய பகுதிகளில் முச்சக்கர வண்டி ஒன்றில் சென்ற மூவர் வீடு வீடாகச் சென்று குளோரின் விற்பனை செய்ததுடன், வீட்டில் உள்ளவர்கள் உள்ளே சென்ற சமயத்தில் வீடு ஒன்றில் இருந்து தேங்காய் எண்ணெய் கொள்கலன் ஒன்றினை திருடிச் சென்றதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிசார் மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த மூவரை முச்சக்கர வண்டியுடன் கைது செய்துள்ளதுடன், தேங்காய் எண்ணெய் கொள்கலனையும் மீட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், குறித்த நபர்கள் 10 கிலோ குளோரின் பையினுள் குளோரினுடன் கோதுமை மாவினையும் கலந்து அப்பகுதியில் விற்பனை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-3,250)


## கடை வாடகைக்கு

சாவகச்சேரி வீதி, அல்லையம்பதி, துன்னாலையில் உணவகத்திற்கு ஏற்ற வகையில் கடை வாடகைக்கு உண்டு.

(C-9647) தொடர்பு : **077 930 4363**

## வீடு விற்பனைக்கு

இணுவில் துரைவீதிக்கு அருகாமையில் ஒரு பரப்பிலுள்ள 3 அறையுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

(தரகர் தேவையில்லை)

தொடர்புகளுக்கு :

**076 610 6539 / 021 5611 243** (2925)

## விரைவு பொதிகள் சேவை

### V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதனர்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-9625)

**0768226240**


# சாவகச்சேரியில் கெரோயினுடன் இருவர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கச்சாய்ப்பகுதியில் 64 மில்லிக்கிராம் கெரோயின் போதைப் பொருளுடன் இரண்டு பேர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3.29)



தோற்றம் - 22.05.1970

மறைவு - 29.05.2020

# மரண அறிவித்தல்

## கதிரித்தம்பி வாசு

(முகாமையாளர் – மக்கள் வங்கி)

கள்ளப்பாடு, முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்பு, விசுவமடுவை வசிப்பிடமாகவும் மடத்தடி, அல்வாய் கிழக்கு, பருத்தித்துறையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி வாசு அவர்கள் நேற்று (29.05.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கதிரித்தம்பி - தங்கேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகனும், சிறிகந்தராசா - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சுமதி (M.A வலயக் கல்வி பணிமனை, வடமராட்சி), அவர்களின் அன்புக் கணவரும், நர்த்தனன் (மாணவன் ஹாட்லிக் கல்லூரி) , மகிழையன் (மாணவன் ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகநாயகி (UK), Dr.தேவநாயகி (தேசிய வைத்தியசாலை கொழும்பு), கீதா (சுவிஸ்), காலஞ்சென்ற கமலநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், யூட் ரவீந்திரராஜா (UK), Dr.லோகநாதன் (காசில் வைத்தியசாலை, கொழும்பு), அருளானந்தம் (சுவிஸ்), சிவபாலன் (புதுக்குடியிருப்பு), காயத்திரி (ஆசிரியை - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமை மைத்துனரும், முகுந்தன் (மாவட்ட விளையாட்டு அலுவலர், முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புச் சகலனும், சௌமியா, சானுஜா, துஷானி, அபிசாந், ஆகாஷ், அபிரா காலஞ்சென்றவர்களான மயூரா, ஜதுர்சன், பிரவீன் ஆகியோரின் பாசமிகு மாமனும், தேனகன், பிரவிஷ்னன், சனாதனன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.05.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி, அல்வாய் கிழக்கு,
பருத்தித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
077 356 8909

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.